> வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்ற வர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத் தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள் [2 பேதுரு 3:10–14; மேலும் பார்க்க, ஏசாயா 65:17–18].

இறுதியாக, புதிய எருசலேம் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிவரும் [பார்க்க, வெளி. 21:1–3]. அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட ஒன்றரை மடங்கு பெரிதாக இருக்கும் அந்தப் பட்டணத்தின் மகிமைகளையும் [பார்க்க, வெளி. 21:16], ஒருபோதும் முடிவுராத காலத்தின் அற்புதங்களையும் நமது சிந்தையினால் கிரகித்துக்கொள்ள முடியாது. நாம் தேவனுடைய ஆளுகையின் கீழாக, இயேசுகிறிஸ்து வுக்கு மகிமையுண்டாகும்படியாக, பரிபூரணமான சமுதாயத்தில் நித்தியமாக வாழ்வோம்!



# 30

# ஆவிக்குரிய யுத்தம் குறித்த நவீன கட்டுக்கதைகள், பகுதி I

சமீப காலங்களில் சபைகளில் ஆவிக்குரிய யுத்தம் குறித்த கருத்து அதிகமாகப் பிரபலமாகிவருகிறது. துரதிருஷ்டவசமாக, போதிக்கப்படும் பல காரியங்கள் வேதவசனங்களுக்கு முரண்பாடான வையாக இருக்கின்றன. இதன் விளைவாக, உலகெங்கிலுமிருக்கும் பல போதகர்கள் வேதாகமத்தில் கூறப்படாத வகைப்பட்ட ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துப் போதித்து, செயல்படுத்திக்கொண்டுவருகிறார்கள். *வேதாகமரீதியான* ஆவிக்குரிய யுத்தம் கண்டிப்பாக உண்டு. இதையே தான் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்கள் செயல்படுத்தி, போதிக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்திலும், அடுத்த அத்தியாயத்திலும் சாத்தா னையும், ஆவிக்குரிய யுத்தத்தையும் குறித்துப் பொதுவாகக் காணப்படும் சில தவறான எண்ணங்களைக் குறித்து நான் குறிப்பிடப் போகிறேன். இது நான் இதைக் குறித்து எழுதிய *சாத்தானையும் ஆவிக்குரிய யுத்தத்தையும் குறித்த நவீன கட்டுக்கதைகள்* என்ற என்னுடைய முழு நூலின் சுருக்கமாகும். இந்த நூலை எங்களுடைய இணையதளத்தில் ஆங்கிலத்தில் வாசிக்க முடியும்.

### கட்டுக்கதை # 1: ‘‘நித்திய காலத்திலிருந்து தேவனும் சாத்தானும் போரிட்டு வருகிறார்கள். இன்றும் அவர்களிடையே போராட்டம் நடந்துவருகிறது.’’

வேதாகமத்தில் தேவனைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கும், மிகவும் அடிப்படையானதும், நன்றாக உறுதிப்படுத்தப்பட்டதுமான சத்தியங்களுக்கு இந்தக் கட்டுக்கதை விரோதமாக இருக்கிறது. தேவன் சர்வவல்லவராக இருக்கிறார்.

தேவனால் *எல்லாக் காரியங்களையும்* செய்ய முடியும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, மத். 19:26]. அவருக்குக் கடினமான காரியம் *எதுவுமில்லை* என்று எரேமியா உறுதிப்படுத்தியிருக்கிறார் [பார்க்க, எரே. 32:17]. அவர் தமது திட்டங்களை நிறைவேற்றுவதை எந்த நபரோ அல்லது சக்தியோ தடுக்க முடியாது [பார்க்க, 2 நாளா. 20:6; யோபு 41:10; 42:2]. எரேமியாவின் மூலமாக தேவன் ''எனக்குச் சமானமானவன் யார்? ... எனக்கு முன்பாக நிற்கப்போகிற மேய்ப்பன் யார்?'' என்று கேட்கிறார் [எரே. 50:44]. *ஒருவரும் இல்லை,* சாத்தானும்கூட இல்லை என்பதே பதிலாகும்.

மேலேயுள்ள வசனங்கள் உறுதிப்படுத்துகிறபடி, தேவன் சர்வவல்லவராக இருப்பாரானால், தேவனும் சாத்தானும் போராடினார்கள், போராடுகிறார்கள் என்று சொல்லுவது தேவன் சர்வவல்லவராக இல்லை என்று சொல்லுவதற்கு அர்த்தமாகும். தேவன் ஒரு சுற்றில் தோற்றுப்போவதாக இருந்தாலும், அல்லது ஓரளவு அவர் சாத்தானால் மேற்கொள்ளப்பட்டாலும் அல்லது சிறிதளவு நேரமாவது அவனோடு எதிர்த்துப் போராட நேரிட்டாலும் அவர் தாம் சர்வவல்லவர் என்று சொல்லுவதுபோல இல்லை என்றாகிவிடும்.

### சாத்தானின் சக்தி குறித்த கிறிஸ்துவின் விளக்கம்

சாத்தான் பரலோகத்திலிருந்து விழுவதைக் குறித்து இயேசுவானவர் ஒருமுறை சொல்லியிருக்கிறார். நமது சர்வவல்ல தேவனோடு ஒப்பிடும்போது அவனுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை அறிய இது உதவியாயிருக்கும்:

> பின்பு அந்த எழுபது பேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் [லூக்கா 10:17,18].

சர்வவல்ல தேவன் சாத்தானைப் பரலோகத்திலிருந்து தள்ளியபோது *அவனால் எதிர்த்துநிற்க முடியவில்லை.* சாத்தான் விழுந்த வேகத்தைச் சுட்டிக்காட்ட இயேசுவானவர் *மின்னல்* என்ற உருவகத்தைப் பயன்படுத்துகிறார். அவன் *மின்னலைப்போலக்* கீழே விழுந்தான். ஒருகணம் அவன் பரலோகத்தில் இருந்தான், அடுத்த கணம் அவனைக் காணோம்!

தேவனால் சாத்தானை இவ்வளவு விரைவாகவும், எளிதாகவும் தள்ள முடியும் என்றால், அவருடைய அதிகாரத்தைப் பெற்ற ஊழியர்களும் வேகமாகவும், எளிதாகவும் பிசாசுகளை விரட்ட முடியும் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்துவின் முதலாவது சீஷர்களைப் போலவே இன்றும்





அதிகமான கிறிஸ்தவர்கள் சாத்தானின் சக்தியின்மீது அதிகமான மரியாதை வைத்திருக்கிறார்கள், அவர்கள் இன்னும் தேவனுடைய வல்லமையைப் பற்றிக்கொள்ளவில்லை. அது *மிகமிக* அதிகமானது. தேவனே சிருஷ்டிகர், சாத்தான் ஒரு சிருஷ்டியாக இருக்கிறான். *சாத்தான் தேவனுக்கு இணையானவன் இல்லை.*

### ஒருபோதும் நடக்காத யுத்தம்

நமக்கு இது விநோதமாகத் தோன்றினாலும்கூட, சாத்தானும் தேவனும் *ஒருபோதும் போரிடவில்லை, போரிட்டுக்கொண்டிருக்கவில்லை, ஒருபோதும் போரிடப் போவதில்லை* என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய செயல்திட்டங்களில் வேறுபாடு காணப்படுகிறது, அவர்கள் ஒருவருக்கொருவர் எதிரானவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இருவர் ஒருவருக்கொருவர் எதிராக இருக்கும்போது, அவர்களில் ஒருவர் மற்றவரைவிட மிகமிக அதிகமான வல்லமையுள்ளவராக இருப்பாரானால், அவர்களுக்கிடையேயுள்ள எதிர்ப்பை நாம் யுத்தமாகக் கருதக்கூடாது. ஒரு மண்புழுவினால் யானையை எதிர்த்துப் போரிட முடியுமா? மண்புழுவைப் போல இருக்கும் சாத்தான் சர்வவல்லமை கொண்டவரை எதிர்த்துப் போரிட பலவீனமாக முயன்றான். அவனுடைய எதிர்ப்புக்கு உடனடியாக முடிவு எடுக்கப்பட்டது. அவன் பரலோகத்தைவிட்டு ''மின்னலைப் போலத்'' தள்ளப்பட்டான். யுத்தம் இல்லை, தள்ளப் படுதல் மட்டுமே இருந்தது.

தேவன் சர்வவல்லவராக இருக்கிறபடியால், தேவன் தாம் செய்ய விரும்புவதைச் செய்வதற்குச் சாத்தானால் எந்தத் தடையையும் உண்டாக்க முடியாது. சாத்தான் எதையாவது செய்யும்படி தேவன் அனுமதித்தார் என்றால், அது இறுதியில் அவருடைய சொந்த தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதாகவே இருக்கும். இதைக் குறித்த வேத வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இந்தச் சத்தியத்தை மிகத் தெளிவாக நாம் கண்டுகொள்ள முடியும்.

சாத்தானுக்கு எதிரான தேவனுடைய மேன்மையான அதிகாரம் நித்தியமான கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்டது மட்டுமின்றி, வருங்காலத்திலும் அது செயல்படுத்தப்படும். வெளிப்படுத்தலில் தனியான ஒரு தூதன் சாத்தானைப் பிடித்த ஆயிரம் வருடத்துக்குக் கட்டி வைப்பதை நாம் காண்கிறோம் [பார்க்க, வெளி. 20:1–3]. சாத்தான் ஆதியில் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டதை ஒரு யுத்தமாகக் கருதமுடியாது என்பது போல இந்த வருங்கால நிகழ்ச்சியையும் ஒரு யுத்தமாகக் கருத முடியாது. சாத்தானால் சங்கிலியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது என்பதையும், தேவன் தமது நோக்கத்தின் படியே அவனை விடுவிப்பார் என்பதையும் கவனியுங்கள் [பார்க்க, வெளி. 20:7–9].

## வருங்காலத்தில் ''பரலோகத்தில் நடக்கும் யுத்தத்தைக்'' குறித்து என்ன?

சாத்தான் ஒருபோதும் தேவனோடு போராடவில்லை, போராடிக் கொண்டிருக்கவில்லை, போராடப் போவதுமில்லை என்றால் வெளிப்படுத்தலின் புத்தகத்தில் பரலோகத்தில் யுத்தம் நடக்கும் என்றும் அதில் சாத்தானும் ஈடுபடுவான் என்றும் சொல்லப்பட்டிருப்பதின் அர்த்தம் என்ன? [பார்க்க, வெளி. 12:7–9]. இது நல்ல கேள்விதான், இதற்கு எளிதாகப் பதிலளிக்க முடியும்.

இந்த யுத்தம் *மிகாவேலுக்கும் அவனுடைய தூதர்களுக்கும், சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும்* இடையில் நடக்கிறது என்பதைக் கவனியுங்கள். தேவன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவர் ஈடுபட்டிருப்பாரானால் இந்த எதிர்கொள்ளலை யுத்தம் என்றே அழைக்க முடியாது. ஏனென்றால் தேவன் சர்வவல்லவராக இருக்கிறபடியால், அவர் ஏற்கெனவே நிரூபித்திருக்கிறபடி, எந்த எதிர்ப்பையும் ஒரே கணத்தில் நசுக்கிப் போட்டுவிட முடியும்.

மிகாவேல் உட்படத் தூதர்கள் சர்வவல்லவர்கள் அல்ல. எனவே அவர்களுக்கும் சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் இடையே நடக்கும் சண்டையை ஒரு யுத்தம் என்று அழைக்க முடியும். ஏனென்றால் சிறிது காலத்துக்கு நேரடியான போராட்டம் நடக்கிறது. ஆனால் இவர்கள் சாத்தானையும் அவனுடைய சேனைகளையும்விட அதிக வல்லமையுள்ளவர்களாக இருக்கிறபடியால் இறுதியில் வெற்றி பெறுவார்கள்.

தேவன் இந்தக் குறிப்பிட்ட யுத்தத்தில் ஏன் தாமே பங்கு கொள்ளாமல் எல்லாவற்றையும் தமது தூதர்களின் கையில் விட்டுவிடுகிறார்? எனக்குத் தெரியவில்லை. தேவன் சர்வ ஞானியாக இருக்கிறபடியால் தமது தூதர்கள் யுத்தத்தில் வெற்றிபெறுவார்கள் என்பதை அறிந்திருக் கலாம். அல்லது தனிப்பட்ட முறையில் தாம் ஈடுபடுவது அவசிய மில்லை என்று அவர் கருதியிருக்கலாம்.

யோசுவாவின் நாட்களில் தீயவர்களாகிய கானானியரைத் தேவன் மிக எளிதாகவும், விரைவாகவும் அழித்துப்போட்டிருக்கலாம் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் அவர் அந்தப் பணியை இஸ்ரவேலரிடம் கொடுப்பதைத் தெரிந்துகொண்டார். ஒருசில வினாடிகளில் தேவனால் செய்துமுடிக்கக் கூடியவைகளைச் செய்து முடிக்க அவர்கள் பல மாதங்கள் போராட வேண்டியிருந்தது. ஏனென்றால் இதற்காக இஸ்ரவேலர் விசுவாசிப்பது அவசியமாக இருந்தபடியால், இதுவே தேவனை அதிகமாகப் பிரியப்படுத்தும் காரியமாக இருக்கலாம். இதுவே ஒருவேளை அவர் வருங்காலத்தில் பரலோகத்தில் நடக்கும் யுத்தத்தில்





நேரடியாகப் பங்குகொள்ளாததற்குக் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் வேதாகமத்தில் இதைக் குறித்துச் சொல்லப்படவில்லை.

வருங்காலத்தில் ஒருநாள் மிகாவேலுக்கும் அவனுடைய தூதனுக்கும் சாத்தானுக்கும் அவனுடைய தூதனுக்கும் யுத்தம் நடைபெறப்போகிறது என்கிறபடியால், கானானில் நடந்த யுத்தங் களின்மூலம் நாம் தேவன் சர்வவல்லவர் இல்லை என்று நினைக்கமுடியாது என்கிறதுபோல அது தேவன் சர்வவல்லவர் இல்லை என்று நாம் நினைப்பதற்கான காரணம் கிடையாது.

## சாத்தான் சிலுவையில் இயேசுவானவரால் தோற்கடிக்கப்படவில்லையா?

இறுதியாக, தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே யுத்தம் என்ற இந்த முதலாவது கட்டுக்கதையைப் பொருத்தவரையில், பொதுவாகக் கூறப்படும் இந்த வாசகத்தை ஆராய்வதோடு இதை முடித்துவைக்க விரும்புகிறேன்: *இயேசுவானவர் சாத்தானைச் சிலுவையில் தோற்கடித் தார்.* இயேசுவானவர் சாத்தானைச் சிலுவையில் *தோற்கடித்தார்* என்று வேதவசனம் உண்மையில் சொல்லவில்லை.

நாம் இயேசுவானவர் சாத்தானைத் *தோற்கடித்தார்* என்று சொல்லும்போது அவர்கள் இருவரும் யுத்தம்செய்தார்கள் என்பதுபோலத் தொனிக்கும்படி செய்கிறோம். இது தேவன் சர்வவல்லவர் இல்லை என்றும், சாத்தான் ஏற்கெனவே தேவனுடைய முழுமையான அதிகாரத்தின் கீழாக இல்லை என்றும் சுட்டிக்காட்டுகிறது. இயேசு கல்வாரியில் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போது சாத்தானுக்கு என்ன நேரிட்டது என்பதை விவரிக்கப் பல வேதாகமரீதியான வழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக அவர் தமது மரணத்தின் மூலமாக, ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை'' அழித்துப்போட்டார் [பார்க்க, எபி. 2:14,15].

எவ்வளவுதூரம் இயேசுவனவர் அவனைச் சக்தியில்லாதவனாக அழித்துப்போட்டார்? சாத்தான் இப்போது முற்றிலும் சக்தியை இழந்து அழிந்துபோகவில்லை என்பதை நாம் அறிவோம். எனென்றால் அப்போஸ் தலனாகிய யோவான் ''உலகமுழுவதும் *பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும்* அறிந்திருக்கிறோம்'' என்று சொல்லியிருக்கிறார் [1 யோவான் 5:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. எபிரெயர் 2:14,15 வசனங்களின்படி சாத்தான் ''மரணத்துக்கு அதிகாரியாக'' இருப்பதி லிருந்து அழித்துப்போடப்பட்டான். இதற்கு அர்த்தம் என்ன?

வேதாகமம் மூன்று வகைப்பட்ட மரணங்களைக் குறித்துக் குறிப்பிடு கிறது: *ஆவிக்குரிய மரணம், சரீரப்பிரகாரமான மரணம், இரண்டாம் மரணம்.*

முந்தைய அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி, வெளிப்படுத்தல் 2:22; 20:6,14; 21:8 வசனங்களில் *இரண்டாவது மரணத்தைப்* பற்றிக் [அல்லது

*நித்திய மரணம்*] கூறப்பட்டுள்ளது. அப்போதுதான் அவிசுவாசிகள் அக்கினிக்கடலில் எறியப்படுவார்கள்.

ஒருவருடைய ஆவி சரீரத்தைவிட்டு விலகும்போது, *சரீரப்பிரகாரமான மரணம்* நேரிடுகிறது. சரீரம் செயல்படுவதை நிறுத்திவிடுகிறது.

*ஆவிக்குரிய மரணம்* பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் பிறக்காத மானிட ஆவியின் நிலைமையை விவரிக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த நபர் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட ஆவியை, பாவகரமான இயல்பைக் கொண்ட ஆவியைப் பெற்றிருக்கிறார். இந்த ஆவி ஓரளவுக்குச் சாத்தானோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த நபரின் சித்திரத்தை எபேசியர் 2:1–3 வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன:

> அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

எபேசிய கிறிஸ்தவர்கள் தங்கள் மீறுதல்களிலும் பாவங்களிலும் *மரித்தவர்களாக* இருந்தார்கள் என்று பவுல் எழுதியிருக்கிறார். அவர் சரீரப்பிரகாரமாக ஜீவனோடு இருந்தவர்களுக்கு இந்த வார்த்தைகளை எழுதியபடியால் அவர் சரீரப்பிரகாரமான மரணத்தைக் குறிப்பிட்டிருக்க முடியாது. எனவே அவர்கள் *ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்கள்* என்றே அவர் சொல்லியிருக்க வேண்டும்.

அவர்களை ஆவிக்குரிய பிரகாரமாகக் கொன்றது எது? அவர்களுடைய ''மீறுதல்களும் பாவங்களுமே'' இதைச் செய்தன. தேவன் ஆதாமிடம் அவன் கீழ்ப்படியாமல் போகும் நாளில் மரிப்பான் என்று சொன்னதை நினைத்துப் பாருங்கள் [பார்க்க, ஆதி. 2:17]. தேவன் சரீரப்பிரகாரமான மரணத்தைக் குறிப்பிடவில்லை, ஆவிக்குரிய மரணத்தைக் குறித்தே கூறினார். ஏனென்றால் ஆதாம் விலக்கப்பட்ட கனியைப் புசித்த நாளில் சரீரப்பிரகாரமாக மரித்துப்போகவில்லை. அவன் அன்று ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துப்போனான், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கழித்தே அவன் சரீரப்பிரகாரமாக மரித்துப்போனான்.





பவுல் தொடர்ந்து, ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாக இருந்த எபேசியர் தங்கள் மீறுதல்களிலும் பாவங்களிலும் நடந்து, ''இவ்வுலக வழக்கிற்கேற்றபடியாக'' [எல்லோரும் செய்வதைப்போல] செய்து, ''ஆகாயத்து அதிகாரப் பிரபுவைப்'' பின்பற்றினார்கள் என்று எழுதியிருக்கிறார்.

இந்த ''ஆகாயத்து அதிகாரப் பிரபு'' யார்? அவனே அந்தகார ராஜ்யத்தை ஆளுகைசெய்கிறவனாக இருக்கும் சாத்தான். அவன் மற்ற தீய ஆவிகளுக்குத் தலைமைத் தளபதியாக இருக்கிறான். எபேசிய நிருபத்தின் கடைசி அதிகாரத்தில் இந்தத் தீய ஆவிகளின் பல்வேறு அணிவரிசைகள் விவரிக்கப்பட்டுள்ளன [பார்க்க, எபே. 6:12].

''கீழ்ப்படியாமையின் பிள்ளை களிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி'' என்று பவுல் குறிப்பிட்டிருக்கிறார். ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்'' என்பது அவிசுவாசிகளைக் குறிக்கிறது, இது அவர்களுடைய பாவகரமான நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் ''*சுபாவத்தினாலே* கோபாக்கினையின் பிள்ளைகளாக'' இருந்தார்கள் என்றும் பவுல் சுட்டிக்காட்டுகிறார் [பார்க்க, எபே. 2:3]. அதாவது, சாத்தான் *அவர்களில்* கிரியை செய்கிறான் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

### பிசாசைத் தகப்பனாகக் கொண்டவர்கள்

அவிசுவாசிகள் அதை உணர்ந்திருந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி, அவர்கள் சாத்தானின் அந்தகார ராஜ்யத்தில் அவனையும் அவனுடைய சேனைகளையும் பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த ஆவிக்குள் அவனுடைய தீய, பாவகரமான இயல்பு இருக்கிறது. எனவேதான் இயேசுவானவர் இரட்சிக்கப்படாத சமயத் தலைவர்களிடம் ஒருமுறை ''நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சை களின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்'' என்று சொல்யிருக்கிறார் [யோவான் 8:44].

மறுபடியும் பிறக்காத நபரைக் குறித்த பரிதாபமான சித்திரமாக இது இருக்கிறது! அவன் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவனாக வாழ்க்கையில் நடக்கிறான், முழுவதுமாகச் சாத்தானின் இயல்பைப் பெற்றிருக்கிறான், தான் அதிகமாகப் பயப்படும் தவிர்க்க முடியாத சரீரப்பிரகாரமான மரணத்தை நோக்கிச் சென்றிருக்கிறான். அவன் அதை உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி, ஒருநாள் அவன் அக்கினிக் கடலில் வீசப்படும்போது மிகமோசமான மரணமாகிய நித்திய மரணத்தை அனுபவிப்பான்.

ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான மற்றும் நித்திய மரணம் எல்லாமே பாவகரமான மனிதரின்மேல் தேவனுடைய கோபாக்கினையின்

வெளிப்பாடுகள் என்பதையும், இவை எல்லாவற்றிலுமே சாத்தானுக்கு ஒரு பங்கு உண்டு என்பதையும் நாம் புரிந்துகொள்ளுவது மிக முக்கியமான காரியமாகும். சாத்தான் இருளின் ராஜ்யத்தையும் ''இருளை விரும்புகிற வர்களையும்'' ஆளுகைசெய்யும்படி தேவன் அனுமதித்திருக்கிறார் [யோவான் 3:19]. ''எனக்குக் கீழ்ப்படியாதவர்களை நீ உன் சக்தியால் கட்டி வைத்திருக்கலாம்'' என்று தேவன் சாத்தானிடம் சொல்லியிருப்பது போலக் காணப்படுகிறது. மீறுதல் செய்யும் மனிதர்கள்மீதான தேவ கோபாக்கினைக்குச் சாத்தான் ஒரு கீழ்ப்படிதலுள்ள கருவியாக ஆனான். எல்லோரும் பாவம் செய்திருக்கிறபடியால், எல்லோரும் சாத்தானின் சக்திக்குக் கீழாக இருக்கிறார்கள். தங்கள் ஆவிகளில் அவனுடைய இயல்பைக் கொண்டவர்களாகவும், அவனுடைய சித்தத்தைச் செய்யும்படி பிடிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள் [பார்க்க, 2 தீமோ. 2:26].

### நாம் பிடிக்கப்பட்டிருப்பதற்கான பிணையத் தொகை

தேவன் மனிதர்களின்மீது இரக்கம் காட்டியிருப்பதற்காக அவருக்கு நன்றி சொல்லுவோம். அவருடைய இரக்கத்தின் காரணமாக எவரும் இந்தப் பரிதாபமான நிலையிலேயே இருக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் பதிலி மரணம் தேவ நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி யிருக்கிறபடியால், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லோரும் இனிமேலும் தேவகோபாக்கினையின் கீழாக இராதபடியால், அவர்கள் ஆவிக்குரிய மரணத்திலிருந்தும், சாத்தானின் பிடியிலிருந்தும் தப்ப முடியும். நாம் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நமது ஆவிக்குள் வாசம்பண்ணும்படி வருகிறார், அதிலிருந்து சாத்தானின் இயல்பை அகற்றுகிறார், நமது ஆவி மறுபடியும் பிறக்கும்படி செய்கிறார் [ பார்க்க, யோவான் 3:1–16]. தேவனுடைய தெய்வீக இயல்பில் நாம் பங்கெடுக்கும்படி அனுமதிக்கிறார் [பார்க்க, 2 பேதுரு 1:4].

இப்போது நமது முதல் கேள்விக்கு வருவோம். எபிரெய நிருப ஆசிரியர் இயேசுவானவர் தமது மரணத்தின் மூலமாக ''மரணத்துக்கு அதிகாரியாக'' இருப்பதிலிருந்து சாத்தானை அழித்துப்போட்டார் என்று சொல்லும்போது, அவர் *ஆவிக்குரிய மரணத்தைக்* குறிப்பிடுகிறார். அவிசுவாசிகள் ஒவ்வொருவரின்மீதும் சாத்தான் இந்தச் சக்தியைப் பெற்றிருக்கிறான். ஆனால் ''கிறிஸ்துவுக்குள்'' இருப்பவர்கள் இதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். நமது பாவங்களுக்கான தண்டனை யைச் செலுத்தித் தீர்த்திருக்கும் கிறிஸ்துவின் மூலமாக நாம் ஆவிக்குரிய பிரகாரமாக ஜீவனுள்ளவர்களாக இருக்கிறோம்.

மேலும், நாம் இனிமேலும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாக வும், சாத்தானின் ஆளுகைக்குக் கீழாக இருப்பவர்களாகவும் இராதபடியால் நாம் இனிமேலும் *சரீரப்பிரகாரமான மரணத்துக்குப்* பயப்பட வேண்டிய அவசியமில்லை. நமக்காக எது காத்திருக்கிறது என்பதை நாம்





அறிவோம் – ஒரு மகிமையான நித்திய சுதந்தரம் பரலோகத்தில் நமக்காகக் காத்திருக்கிறது.

இறுதியாக, இயேசுவானவரின் மூலமாக நாம் அக்கினிக் கடலில் வீசப்படுவதான *இரண்டாம் மரணத்தின்* பாடுகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டிருக்கிறோம்.

இயேசுவானவர் சிலுவையில் பிசாசைத் *தோற்கடித்தாரா?* இல்லை, அவர் தோற்கடிக்கவில்லை. ஏனென்றால் இயேசுவானவருக்கும் சாத்தானுக்கும் இடையில் யுத்தம் நடக்கவில்லை. என்றாலும், ஆவிக்குரிய மரணத்தின்மீது சாத்தான் கொண்டிருந்த சக்தியை இயேசு வானவர் முறியடித்தார். இந்தச் சக்தியின்மூலமாகவே அவன் அவிசுவாசி களான மக்களைப் பாவத்தில் பிடித்து வைத்திருக்கிறான். சாத்தான் இப்போதும் அவிசுவாசிகளின்மீது ஆவிக்குரிய மரணத்தின் சக்தியைப் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களைப் பொருத்தவரையில் அவன் சக்தியில்லாதவனாக இருக்கிறான்.

### அதிகாரங்களை உரிந்துகொள்ளுதல்

கொலோசெயர் 2:13–15 வசனங்களில் ''துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டதைக்'' குறித்துப் பவுல் கூறியிருப்பதைப் புரிந்துகொள்ளவும் இது உதவியாக இருக்கிறது.

> உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர் களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப் பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; *துரைத்தனங் களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்* [அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

பவுல் இந்த இடத்தில் உருவக மொழியைப் பயன்படுத்தி யிருக்கிறார் என்பது தெளிவாகிறது. முதலாவது பகுதியில் அவர் நமது குற்றத்தை கடன்பத்திரத்தின் கையெழுத்துக்கு ஒப்பிடுகிறார். கிறிஸ்து நமது பாவக் கடனைச் சிலுவையில் சுமந்து, நம்மால் செலுத்த முடியாததைச் செலுத்தித் தீர்த்திருக்கிறார்.

இரண்டாவது பகுதியில், அந்த நாளைய ராஜாக்கள் தங்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளின் ஆயுதங்களை உரிந்துபோட்டு, அவர்களை இழுத்துக்கொண்டு, வெற்றிகரமாகப் பவனி வருவதுபோல,

இயேசுவானவர் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார் என்று பவுல் சொல்லுகிறார். அதாவது, மீறுதலுக்குள்ளாகி யிருக்கும் மனிதர்களைப் பிடித்துவைத்திருக்கும் பிசாசின் சேனை களுக்கு மேலாக அவர் வெற்றிசிறந்தார்.

இந்தப் பகுதியின் அடிப்படையில் கிறிஸ்து சாத்தானைத் *தோற்கடித்தார்* என்று நம்மால் சொல்ல முடியுமா? ஓரளவுக்குச் சொல்ல முடியும் என்றாலும் நாம் ஒன்றைக் கருத்தில்கொள்ள வேண்டும். இந்தப் பகுதியில் பவுல் உருவகரீதியாக எழுதுகிறார். வேதாகமத்துக்கு அர்த்தம் காணுதல் குறித்த அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி ஒவ்வொரு உருவகத்திலும் ஒற்றுமைகள் வேற்றுமைகளாக மாறும்போது அதில் ஒரு கருதது இருக்கிறது என்று நாம் பார்த்திருக்கிறோம்.

கொலோசெயர் 2:13–15 வசனங்களில் பவுலின் உருவகங் களுக்கு நாம் அர்த்தம்காணும்போது கவனமாக இருக்க வேண்டும். உண்மையில், நமது பாவங்கள் எல்லாம் எழுதப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்ட ஒரு ''கடன்பத்திரமாக'' இருக்கவில்லை. இது இயேசு வானவர் செய்ததை அடையாளரீதியாகக் குறிப்பிடுகிறது.

இதைப்போலவே, இரட்சிக்கப்படாத மனிதர்களின்மீது ஆளுகை செய்த பிசாசுகளின் ஆயுதங்கள் உரிந்துகொள்ளப்பட்டு, அவை இயேசு வினால் பகிரங்கமாக வெளியில் இழுத்துச் செல்லப்படவில்லை. பவுல் பயன்படுத்தும் மொழி இயேசுவானவர் நமக்காகச் செய்ததை அடையாள ரீதியாகக் குறிப்பிடுகிறது. நாம் தீய ஆவிகளால் சிறைப்பிடிக்கப்பட்டருந் தோம். ஆனால் நமது பாவங்களுக்காக மரித்ததின்மூலம் இயேசு வானவர் நம்மை விடுவித்தார். இயேசுவானவர் நேரடியாகத் தீய ஆவிகளோடு போரிடவில்லை, அவை அவரோடு யுத்தம்பண்ண வில்லை. அவை தேவனுடைய நீதியுள்ள அனுமதியின்மூலம் நமது வாழ்க்கை முழுவதையும் தங்கள் சக்திக்குள் வைத்திருந்தன. அவைகளின் ''ஆயுதங்கள்'' கிறிஸ்துவை நோக்கி அல்ல, நம்மை நோக்கியே நீட்டப்பட்டிருந்தன. என்றாலும் இயேசுவானவர் அவைகளை உரிந்துபோட்டார். இனிமேலும் அவைகளால் நம்மைப் பிடித்துவைத்திருக்க முடியாது.

இயேசுவானவருக்கும் சாத்தானின் தீய ஆவிகளுக்கும் யுகயுகமாக யுத்தம் நடந்துவந்தது என்றும், இறுதியில் இயேசுவானவர் சிலுவையில் வெற்றிபெற்றார் என்றும் நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. இயேசு வானவர் பிசாசைத் தோற்கடித்தார் என்று நாம் சொல்லுவோமானால், அவர் தமக்காக அல்ல, *நமக்காகவே* பிசாசைத் தோற்கடித்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருமுறை என்னுடைய சிறுமகளை அச்சுறுத்திக்கொண்டிருந்த ஒரு சிறிய நாயை என் முற்றத்திலிருந்து விரட்டிவிட்டேன். நான்





அந்தச் சிறிய நாயைத் தோற்கடித்தேன் என்று ஒருவேளை சொல்லலாம். ஆனாலும் அந்த நாய் எனக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்கவில்லை. என்னுடைய மகளை மட்டுமே அது பயமுறுத்தியது. இயேசுவுக்கும் சாத்தானுக்கும் இடையில் இதுவே உண்மையாக இருக்கிறது. இயேசுவானவர் தமக்கு ஒருபோதும் தொந்திரவு விளைவிக்காத ஒரு நாயை நமக்காக விரட்டினார்.

அவர் எப்படிச் சாத்தான் என்ற நாயை விரட்டினார்? அவர் நமது பாவங்களுக்கான தண்டனையைத் தாமே சுமந்து, தேவனுக்கு முன்பாக நமது குற்றத்திலிருந்து நம்மை விடுவித்து, இப்படியாகத் தேவ கோபாக்கினையிலிருந்து நம்மை விடுவிப்பதின் மூலம் அவர் அதைச் செய்தார். இப்படியாக, மீறுதல் செய்யும் மனிதர்களை அடிமைப்படுத்தும் படி தேவன் நீதியாய் அனுமதிக்கும் தீய ஆவிகள் நம்மை அடிமைப் படுத்தும் உரிமையை இழந்துபோயின. இதற்காக நாம் தேவனைத் துதிப்போமாக!

இது இரண்டாவது கட்டுக்கதையை ஆராய்ந்துபார்க்கக்கூடிய பொருத்தமான இடத்துக்கு நம்மை வழிநடத்துகிறது.

### கட்டுக்கதை # 2: ''தேவனுடைய தூதர்களுக்கும் சாத்தானின் தூதர்களுக்கும் இடையில் ஆவிக்குரிய உலகில் தொடர்ந்து யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இந்த யுத்தங்களின் விளைவு நமது ஆவிக்குரிய யுத்தத்தினால் தீர்மானிக்கப்படுகிறது.''

நாம் ஏற்கெனவே வெளிப்படுத்தலின் புத்தகத்திலிருந்து ஒரு நாளில் மிகாவேலுக்கும் அவனுடைய தூதர்களுக்கும், சாத்தான் மற்றும் அவனுடைய தூதர்களுக்கும் இடையில் வானத்தில் யுத்தம் நடக்கும் என்று அறிந்திருக்கிறோம். இதற்கு அப்பாற்பட்டு தூதர்களுக்கு இடையில் நடக்கும் *ஒரேயொரு* யுத்தத்தைக் குறித்தே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தானியேல் பத்தாம் அதிகாரத்தில் நாம் இதைக் காண்கிறோம். [82]

[82] இரண்டு எதிர்ப்புக்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டுள்ளது: 1) மோசேயின் சரீரத்தைக் குறித்து மிகாவேலுக்கும் சாத்தானுக்கும் இடையில் தர்க்கம் நடந்த தாக யூதா குறிப்பிட்டிருக்கிறார், ஆனால் யுத்தம் நடந்ததாகக் குறிப்பிடப்பட வில்லை. உண்மையில், ''பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்'' என்றே யூதா எழுதியிருக்கிறார் (யூதா 1:9). 2) தோத்தான் என்ற பட்டணத்தில் எலிசாவும் அவருடைய ஊழியக்காரனும் சீரிய இராணுவத்தினரால் சூழப்பட்டபோது, எலிசா தேவன் தனது சேவகனின் கண்களைத் திறக்க வேண்டும் என்று ஜெபித்தார் (2 இரா. 6:15–17). இதன் விளைவாக அந்தச் சேவகன் ''அக்கினி மயமான குதிரைகளையும், இரதங்களையும்'' கண்டான். இது ஆவிக்குரிய

பெர்சிய அரசனாகிய கோரேசுவின் ஆளுகையின் மூன்றாம் ஆண்டில் தானியேல் மூன்று வாரங்கள் துக்கித்துக் கொண்டிருந்தபோது ஒரு தூதன் இதெக்கேல் ஆற்றங்கரையில் அவரைச் சந்தித்தான். இஸ்ரவேலின் எதிர்காலத்தைக் குறித்த புரிந்துகொள்ளுவதலை அவருக்குக் கொடுப்பதே தூதனின் வருகையின் நோக்கமாகும். சபை எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்தும் இறுதி நாட்களைக் குறித்தும் தானியேலுக்குச் சொல்லப்பட்டவைகளைக் குறித்து நாம் ஏற்கெனவே முந்தைய அத்தியாயத்தில் பார்த்திருக்கிறோம். இந்த உரையாடலின் போது பெயர் சொல்லப்படாத அந்தத் தூதன் தானியேலிடம் இவ்வாறு சொன்னான்:

> அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்து கிறதற்கும், உன் மனதைச்செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன். *பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி* இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; *ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்;* ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன் [தானியேல் 10: 12–13].

இந்தத் தூதனைச் சந்திப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பே தனது ஜெபம் கேட்கப்பட்டது என்று தானியேல் அறிந்துகொண்டார். ஆனால் அதைத் தூதன் வந்து அறிவிக்க மூன்று வார கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ''பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி'' அவனை எதிர்த்து நின்றதே இதற்குக் காரணமாகும். ''பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய'' மிகாவேல் அவனுக்கு உதவிசெய்ய வந்தபோது இந்தத் தூதனால் அதிலிருந்து விடுபட முடிந்தது.

தூதன் தானியேலை விட்டுச் செல்லும் வேளையில் தானியேலிடம் இப்படிச் சொன்னான்:

> இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ணத் திரும்பிப்போகிறேன்; நான் போனபின்பு,

உலகத்தைச் சேர்ந்த தூதர்களின் சேனை என்று நாம் அனுமானிக்கிறோம். ஆனால் இது இவர்கள் பிசாசின் தூதர்களோடு சண்டையிடுவதையோ அல்லது சண்டையிடப் போவதையோ குறிக்கவில்லை. தேவன் தீயர்களின் மீதான தனது கோபாக்கினையைச் செயல்படுத்தச் சில வேளைகளில் தூதர்களவைப் பயன்படுத்தியிருக்கிறார். 2 இராஜாக்கள் 19:35 வசனத்தில் ஒரே தூதன் 185,000 அசீரிய போர்ச்சேவகர்களைச் சங்காரம் பண்ணுவதை நாம் காண்கிறோம்.





> கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான். சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன்; உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை [தானியேல் 10: 20–21].

இந்த வேதாகமப் பகுதியிலிருந்து பல சுவாரசியமான உண்மைகளை நாம் கற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய. தூதர்கள் சர்வவல்லவர்கள் இல்லை என்பதையும், அவர்கள் தீய தூதர்களோடு சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்க முடியும் என்பதையும் நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

இரண்டாவதாக, சில தூதர்கள் [மிகாவேல் போன்றவர்கள்] மற்றத் தூதர்களைவிட [தானியேலிடம் பேசிய தூதன் போன்றவர்கள்] அதிக வல்லமையுடையவர்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

### நம்மிடம் பதில்கள் இல்லாத கேள்விகள்

''மூன்றுவார கால தாமதம் இராதபடிக்கு, தேவன் ஏன் முதலிலேயே மிகாவேலிடம் செய்தியைக் கொடுத்து அனுப்பியிருக்கக் கூடாது?'' என்று நாம் கேள்வியெழுப்பலாம். தேவன் தாம் அனுப்பும் தூதன் ''பெர்சிய ராஜ்யத்தின் அதிபதியால்'' தடுத்து நிறுத்தப்படுவான் என்பதை அறிந்திருந்தும் ஏன் மிகாவேலின் துணையில்லாமல் அவனை அனுப்பினார் என்பதற்கான விளக்கம் வேதாகமத்தில் கொடுக்கப்படவில்லை. உண்மையில், தேவன் ஏன் ஒரு செய்தியைக் கொடுக்க ஒரு தூதனை அனுப்ப வேண்டும் என்பதைக் கூட நாம் அறிந்திருக்கவில்லை. அவர் ஏன் நேரடியாகத் தானியேலிடம் சென்று அவன் கேட்கக் கூடிய வகையில் அந்தச் செய்தியைச் சொல்லியிருக்கக் கூடாது? அல்லது தானியேலைத் தாற்காலிகமாகப் பரலோகத்துக்கு வரவழைத்து அவரிடம் அதைச் சொல்லக் கூடாது? நமக்குப் பதில் தெரியவில்லை.

ஆனால் ஆவிக்குரிய உலகத்தில் தேவனுடைய தூதர்களுக்கும் சாத்தானின் தூதர்களுக்கும் தொடர்ந்து யுத்தம் நடக்கிறது என்பதை இந்தப் பகுதி நிரூபிக்கிறதா? இல்லை, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தேவனுடைய பலவீனமான தூதர்களில் ஒருவனுக்கும், ''பெர்சிய ராஜாவின் அதிபதி'' என்று அழைக்கப்பட்ட சாத்தானின் தூதனுக்கும் இடையே மூன்றுவார காலம் ஒரு போராட்டம் நடந்தது என்பதை மட்டுமே அது நிரூபிக்கிறது. தேவனுக்குச் சித்தமாக இருந்தால் அது ஒருபோதும் நடந்திருக்காது. *முழு வேதாகமத்திலும் தூதர்களுக்கிடையே நடக்கும் யுத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்ற யுத்தம் வெளிப்படுத்தலின் புத்தகத்தில் வானத்தில் நடக்கும் யுத்தமாகக்*

*குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரே யுத்தம் மட்டுமேயாகும்.* தூதர்களிடையே வேறு போராட்டங்களும் நடந்திருக்கலாம். ஆனால் அப்படி முடிவு செய்வது நம்மைப் பொருத்தவரையில் யூகமாகவே இருக்கும்.

**ஒரு கட்டுக்கதையை அடிப்படையாகக் கொண்ட கட்டுக்கதை**

தானியேல் மற்றும் பெர்சிய ராஜ்ய அதிபதியைக் குறித்த இந்த நிகழ்ச்சி நமது ஆவிக்குரிய யுத்தம் தூதர்களுக்கு இடையில் நடக்கும் யுத்தத்தின் முடிவைத் தீர்மானிக்கும் என்று நிரூபிக்கிறதா? மறுபடியுமாக, சில வேதவசனங்களின் அடிப்படையில், இந்தக் கருத்து தூதர்களிடையே ஒழுங்கான யுத்தங்கள் *நடக்கின்றன* என்பதை *அனுமானிக்கிறது*. நாம் ஒரு படி முன்னால் போய் ஒழுங்கான வகையில் தூதர்களிடையே யுத்தங்கள் நடக்கின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். தானியேலைக் குறித்த இந்த நிகழ்ச்சி நமது ஆவிக்குரிய யுத்தமானது தூதர்களிடையே நடக்கக்கூடிய யுத்தங்களின் முடிவைத் தீர்மானிக்கிறதா?

இந்தக் குறிப்பிட்ட கட்டுக்கதையை ஆதரிப்பவர்கள் பெரும்பாலும் ‘‘தானியேல் ஒரு நாளுக்குப் பிறகு விட்டுவிட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?’’ என்று கேட்கிறார்கள். உண்மையில் இந்தக் கேள்விக்குப் பதில் எவருக்கும் தெரியாது. ஏனென்றால் பெயர் சொல்லப்படாத தூதன் வரும்வரையில் தானியேல் ஜெபத்தில் தேவனைத் தேடுவதை நிறுத்தவில்லை. இந்தக் கேள்வியைக் கேட்பதற்குக் காரணம், தானியேல் தொடர்ந்து ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டதுதான் பெயர் சொல்லப்படாத தூதன் பரலோகத்திலிருந்து இறங்கியதற்குத் திறவுகோல் என்பதை உறுதிப்படுத்தவேயாகும். தானியேல் தனது ஆவிக்குரிய யுத்தத்தைக் கைவிட்டிருந்தால், அந்தத் தூதனால் பெர்சியா ராஜ்யத்தின் அதிபதியைக் கடந்துவந்திருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். நாமும்கூட தானியேலைப் போலத் தொடர்ந்து ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிராவிட்டால் ஒரு தீய தூதன் தேவனுடைய தூதனை வெற்றிகொண்டுவிடலாம் என்று நம்மை நம்பச் செய்வதற்காகவே அவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள்.

முதலாவதாக, தானியேல் ‘‘ஆவிக்குரிய யுத்தம் செய்யவில்லை’’ என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *அவர் தேவனை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்தார்.* பிசாசுகளிடம் அவர் எதையாவது சொல்லியதாகவோ, அல்லது அவைகளைக் கட்டியதாகவோ அல்லது அவைகளுக்கு எதிராக ‘‘எச்சரிப்பு’’ விட்டதாகவோ எதுவும் சொல்லப் பட்டிருக்கவில்லை. *மூன்று வாரங்கள் கழித்து பெயர் சொல்லப்படாத தூதன் தனைச் சந்திக்கும் வரையில் தூதர்களிடையே யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறித்தே தானியேல் அறியவில்லை.* அவர் அந்த மூன்று வாரங்களும் உபவாசித்து தேவனைத் தேடினார்.





எனவே கேள்வியை இப்படி மாற்றிக்கேட்கலாம்: ஓரிரு நாட்களில் தானியேல் உபவாசித்து தேவனைத தேடுவதை நிறுத்தியிருப்பாரானால், பெயர் சொல்லப்படாத அந்தத் தூதனால் அவருக்குத் தேவனுடைய செய்தியைக் கொண்டுவர முடியாமல் போயிருக்குமா? நமக்குத் தெரியாது. பெயர் சொல்லப்படாத தூதன் தானியேலிடம் ‘‘நீ தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தது நல்லது. இல்லாவிட்டால் என்னால் இங்கே வந்திருக்க முடியாது’’ என்று சொல்லவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன். தான் அங்கே வந்ததற்கு மிகாவேலே காரணம் என்றே அந்தத் தூதன் சொன்னான். தேவனே அந்தப் பெயர் சொல்லப்படாத தூதனையும், மிகாவேலையும் அனுப்பினார். இஸ்ரவேலின் வருங்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தானியேல் அறியும்படியாக அவருடைய ஜெபத்துக்குப் பதிலாகத் தேவன் இதைச் செய்தார்.

தானியேல் உபவாசிப்பதையோ அல்லது தேவனை நோக்கி ஜெபிப்பதையோ நிறுத்தியிருந்தால் தேவன் ‘‘இரண்டு தூதர்களே, தானியேல் உபவாசித்து ஜெபிப்பதை நிறுத்திவிட்டிருக்கிறான். எனவே அவன் ஜெபிக்கத் துவங்கிய முதல் நாளே நான் அவனுக்குச் செய்தியைக் கொடுக்கும்படி உங்களை அனுப்பியிருந்தாலும், இப்போது தானியேலிடம் அந்தச் செய்தியைக் கொடுப்பதைக் குறித்து மறந்து விடுங்கள். தானியேலின் புத்தகத்தில் பதினொன்றாம் மற்றும் பன்னிரண்டாம் அதிகாரம் இருக்காது என்றே தோன்றுகிறது’’ என்று சொல்லியிருக்கலாம் என்று நினைப்பது வெறும் அனுமானம் மட்டுமேயாகும்.

தானியேல் உண்மையில் ஜெபித்திலேயே ஊக்கமாகத் தரித்திருந் தார், ‘‘ஆவிக்குரிய யுத்தத்தில்’’ அல்ல. தேவன் தூதர்களை அனுப்பிய தின்மூலம் அதற்குப் பதிலளித்தார். நாமும்கூட தேவனை நோக்கி ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். தேவனுக்கு அது சித்தமானால் அவர் ஒரு தூதனின் மூலம் தமது பதிலை அனுப்புவார். ஆனால் ஒருவரும் மூன்று வார ஜெபம் அல்ல, ஒரு ஜெபத்தையும் ஏறெடுக்காமலே தேவ தூதர் மூலம் செய்திபெற்ற பல எடுத்துக்காட்டுகள் வேதாகமத்தில் இருக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்.[83] நாம் சமநிலையுள்ளவர் களாக இருப்பது அவசியமாகும். மேலும் இப்படிச் செய்திகொடுத்த தூதர்கள் பரலோகத்திலிருந்து வரும் வழியில் தீய தூதர்களோடு போரிட வேண்டியிருந்தது என்று குறிப்பிடப்படவில்லை. அவர்கள் ஒருவேளை தங்கள் செய்தியைக் கொடுப்பதற்காகத் தீய தூதர்களோடு யுத்தம்பண்ண வேண்டியிருந்திருக்கலாம், ஆனாலும் வேதாகமத்தில் அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

[83] எடுத்துக்காட்டாக, பார்க்க, மத். 1:20; 2:13,19; 4:11; லூக்கா 1:11–20,26–38.

எனவே பொதுவாக நம்பப்படும் மூன்றாவது கட்டுக்கதையைப் பற்றி இப்போது நாம் பார்ப்போம்.

### கட்டுக்கதை # 3: ''ஆதாம் வீழ்ச்சியடைந்தபோது உலகத்தைக் கட்டுப்படுத்தும் குத்தகையைச் சாத்தான் அவனிடமிருந்து பெற்றுக்கொண்டான்.''

மானிட வீழ்ச்சியின்போது சாத்தானுக்கு உண்மையில் நடந்தது என்ன? ஆதாம் வீழ்ச்சியைடந்தபோது, சாத்தானுக்குப் பெரியதொரு உயர்வு கிடைத்தது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆதாமே ஆதியில் ''இந்த உலகத்தின் அதிபதியாக'' இருந்தான் என்றும், அவனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு *சாத்தான்* அந்தத் தகுதியைப் பெற்றான் என்றும், அதனால் அவன் உலகத்தில் தான் விரும்பியதைச் செய்யும் உரிமையைப் பெற்றிருக்கிறான் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அன்றிலிருந்து தேவனால்கூட அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை; ஏனென்றால் ஆதாம் தனது ''சட்டபூர்வமான உரிமையை'' அவனுக்குக் கொடுத்து விட்டபடியால், தேவன் ஆதாமோடு செய்துகொண்ட ஒப்பந்தம் இப்போது சாத்தானின் வசம் இருக்கிறபடியால் அவர் அதை மதிக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். சாத்தான் இப்போது ''ஆதாமின் குத்தகையைப்'' பெற்றிருக்கிறான். ''ஆதாமின் குத்தகைக் காலம்'' முடியும் வரையில் தேவனால் சாத்தானைத் தடுக்க முடியாது என்பது அவர்களுடைய விவாதமாகும்.

இந்தக் கொள்கை உண்மயானதுதானா? மனிதனின் வீழ்ச்சியின்போது சாத்தான் ''ஆதாமின் குத்தகையைப்'' பெற்றுக்கொண்டானா?

நிச்சயமாக இல்லை. மனிதனின் வீழ்ச்சியின்போது சாத்தானுக்கு எந்த ஆதாயமும் கிடைக்கவில்லை, அவன் தேவனிடமிருந்து சாபத்தையே பெற்றான். அவனுடைய முழுமையான அழிவைக் குறித்த தேவ வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டது.

வேதாகமம் ஒரு இடத்திலும் ஆதாமே ஆதியில் ''உலகத்தின் அதிபதியாக'' இருந்தான் என்று சொல்லவில்லை. இரண்டாவதாக, ஆதாம் உலகத்தைக் குறித்த சட்டபூர்வமான அதிகாரத்தைப் பெற்றிருந்தான் என்றும் அதை அவன் எவரிடமாவது கொடுத்தான் என்றும் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. மூன்றாவதாக, ஆதாம் ஒரு நாளில் முடிவடையும் குத்தகையைப் பெற்றிருந்தான் என்று வேதாகமம் சொல்லவில்லை. இந்தக் கருத்துக்கள் எல்லாமே வேதாகமரீதியானவை அல்ல.

ஆதாம் ஆதியில் பெற்றிருந்த அதிகாரம் என்ன? ஆதியாகமத்தில் தேவன் ஆதாமிடமும் ஏவாளிடமும் ''நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, *சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப்*





*பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்''* என்று கூறினார் என்று நாம் வாசிக்கிறோம் [ஆதி. 1:28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பருவநிலை போன்ற எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்படியாகவும், பிறக்கப்போகும் எல்லா மக்களையும் கட்டுப்படுத்தும்படியாகவும், உலகத்தின் ''அதிபதியாக'' இருப்பதைக் குறித்துத் தேவன் ஆதாமிடம் எதுவும் சொல்லவில்லை. முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் தேவன் மீன்களையும், பறவைகளையும், மிருகங்களையும் ஆண்டுகொள்ளும்படி சொல்லி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தும்படியான கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தார்.

தேவன் ஆதாமுக்குத் தமது நியாயத்தீர்ப்பை அறிவித்தபோது அவன் ''உலகத்தின் அதிபதி'' என்ற பதவியை இழந்துபோவதாக அவர் சொல்லவில்லை. மேலும் அவர் அவர்களிடம் அவர்கள் மீன்கள், பறவைகள், மிருகங்களை ஆண்டுகொள்ளுவதை இழந்துபோவதாகவும் அவர் சொல்லவில்லை. உண்மையில் இன்றும் மனிதர்களே உலகத்திலுள்ள மீன்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் ஜந்துக்கை ஆண்டுகொண்டிருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். மானிட இனம் இன்றும் உலகத்தை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆதாம் தனது வீழ்ச்சியின்போது தேவனால் ஆதியில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை இழந்துபோகவில்லை.

### சாத்தான் ''உலகத்தின் அதிபதியாக'' இருக்கவில்லையா?

பவுல் சாத்தானை ''பிரபஞ்சத்தின் பிரபு'' என்றும் இயேசுவானவர் அவனை ''உலகத்தின் அதிபதி'' என்றும் அழைக்கவில்லையா? ஆமாம், அழைத்தார்கள். ஆனால் எவரும் ஆதாமே ஆதியில் ''உலகத்தின் அதிபதியாக'' இருந்தான் என்றும் அவனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு சாத்தான் அவனிடமிருந்து அந்தப் பதவியைப் பெற்றுக்கொண்டான் என்றும் சொல்லவில்லை.

மேலும் சாத்தான் ''உலகத்தின் அதிபதி'' என்கிறபடியால் அவனால் உலகத்தில் எதையும் செய்ய முடியும், தேவனால் அதைத் தடுக்க முடியாது என்பது கிடையாது. ''வானத்திலும் *பூமியிலும் சகல அதிகாரமும்* எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [மத். 28:18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இயேசுவானவர் பூமியில் *சகல* அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார் என்றால் *அவருடைய* அனுமதியின் கீழாக மட்டுமே சாத்தானால் செயல்பட முடியும்.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் இயேசுவுக்குக் கொடுத்தது யார்? பிதாவாகிய தேவனே அதை வைத்திருந்தார், அதை அவர் இயேசுவுக்குக் கொடுத்தார். எனவேதான் இயேசுவானவர் தமது

பிதாவைக் குறித்துச் சொல்லும்போது ''வானத்துக்கும் *பூமிக்கும்* ஆண்டவர்'' என்று சொல்லியிருக்கிறார் [மத். 11:25; லூக்கா 10:21 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவன் உலகத்தைச் சிருஷ்டித்ததிலிருந்து அதன்மீதான சகல அதிகாரத்தையும் பெற்றிருந்தார். துவக்கத்தில் அவர் மனிதருக்குக் கொஞ்சம் அதிகாரத்தைக் கொடுத்தார். தேவன் ஆதியில் கொடுத்ததை மனிதன் ஒருபோதும் இழந்துபோகவில்லை.

சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி என்று வேதாகமம் சொல்லும் போது, மறுபடியும் பிறக்காத உலகத்தின் மக்கள் சாத்தானைப் பின்பற்று கிறார்கள் என்பதையே அது சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் அதை உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி, அவனுக்கே அவர்கள் ஊழியம் செய்கிறார்கள். அவனே அவர்களுக்குக் கடவுளாக இருக்கிறான்.

### சாத்தான் உலகத்தைக் கொடுப்பதாகச் சொன்னது எப்படி?

இந்தக் கொள்கைக்கு அடிப்படையாகச் சாத்தான் இயேசுவைச் சோதித்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டப்படுகிறது. மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இதைக்குறித்துக் கூறப்பட்டுள்ளது. லூக்கா சொல்லி யிருப்பதிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ளுகிறோம் என்பதைப் பார்ப்போம்.

> பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து: இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவை களின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார் [லூக்கா 4:5–8].

இந்த நிகழ்ச்சி சாத்தான் உலகத்திலுள்ள *எல்லாவற்றையும்* தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான் என்பதை நிரூபிக்கிறதா அல்லது ஆதாம் அவைகளை அவனுக்குக் கொடுத்துவிட்டான் என்பதையோ அல்லது தேவனால் பிசாசைத் தடுக்க முடியாது என்பதையோ நிருபிக்கிறதா? இல்லை, இதற்குப் பல நல்ல காரணங்கள் உண்டு.

முதலாவதாக, ''பொய்க்குப் பிதா'' என்று இயேசுவானவரால் அழைக்கப்பட்ட ஒருவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் நமது





இறையியலைக் கொண்டுவருவதைக் குறித்து நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் [யோவான் 8:44]. சாத்தான் சில வேளைகளில் உண்மையைச் சொல்லுகிறான். ஆனால் இங்கே சாத்தான் சொல்லுவது தேவன் சொல்லியிருப்பதற்கு முரணாக இருக்கிறபடியால், நாம் அதிக எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

தானியேலின் புத்தகத்தின் நான்காம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் ராஜா எப்படித் தாழ்மைப்படுத்தப்படுகிறான் என்பதை நாம் பார்க்கிறோம். தனது பதவி மற்றும் சாதனைகளைக் குறித்து நேபுகாத்நேச்சார் அதிகப் பெருமை கொண்டிருந்தான். தானியேல் அவனிடம் ''*உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார்*'' என்பதை அவன் அறிந்துகொள்ளும் வரையில் மாடுகளைப்போலப் புல்லை மேய்வான் என்று சொன்னார் [தானி. 4:25 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்படியாக இது நான்கு முறை மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது [பார்க்க, தானி. 4:17,25,32: 5:21].

''*உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்*'' என்று தானியேல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இது தேவன் உலகத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது அல்லவா?

சாத்தான் சொல்லுவதற்கும் தானியேல் சொல்லுவதற்கும் நேரடியான முரண்பாடு இருப்பதைக் கவனியுங்கள். தேவன் ''தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார்'' என்று தானியேல் சொல்லி யிருக்கிறார். ஆனால் சாத்தானோ ''எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்'' என்று சொல்லுகிறான் [லூக்கா 4:7].

அப்படியானால் நீங்கள் யாரை விசுவாசிக்கப் போகிறீர்கள்? நானோ வென்றால் தானியேல் சொல்லியதையே விசுவாசிக்கப் போகிறேன்.

சாத்தான் கூறியதை மற்றொரு கோணத்திலிருந்து பார்ப்போமானால் அது உண்மையாக இருக்கலாம் என்ற சாத்தியக் கூறும் இருக்கிறது.

சாத்தான் ''உலகத்தின் அதிபதியாக'' இருக்கிறான். நாம் ஏற்கெனவே பார்த்தபடி அவன் இருளின் ராஜ்யத்தை ஆளுகை செய்கிறான். தேவனுக்கு விரோதமான எல்லா ஜாதியையும் சேர்ந்த மக்கள் அதில் இருக்கிறார்கள். ''உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்'' என்று வேதாகமம் சொல்லு கிறது [1 யோவான் 5:19]. தான் விரும்புகிறவர்களுக்கு உலக ராஜ்யத்தின் அதிகாரத்தைக் கொடுப்பதாகச் சாத்தான் சொல்லியபோது, *தனது சொந்த ஆளுகையை, தனது இருளின் ராஜ்யத்தை* அவன் குறிப்பிட்டிருக்கலாம். அவன் தீய ஆவிகளின் அணிவரிசையைக் கொண்டு தனது ராஜ்யத்தை

ஆளுகை செய்கிறான் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது [பார்க்க, எபே. 6:12]. அவனே தலைவனாக இருக்கிறபடியால் தனக்குக் கீழாக இருப்பவர்களை அவனே பதவியில் உயர்த்துகிறான். இது இப்படி யிருக்குமானால் அவன் தனது ராஜ்யத்தில் தனக்கு அடுத்த இரண்டாவது இடத்தை, இருளின் ராஜ்யத்தை ஆளுகை செய்ய உதவும்படி இயேசு வுக்குக் கொடுப்பதாக அவன் சொல்லுகிறான். இயேசு செய்ய வேண்டிய தெல்லாம் அவனுக்கு முன்பாக விழுந்து அவனை வணங்க வேண்டியது தான். இயேசுவானரோ இதை உதறித் தள்ளிவிட்டார்.

### சாத்தானுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

இந்த ராஜ்யங்களின் அதிகாரம் தனக்கு ''ஒப்புக்கொடுக்கப்பட்டிருக் கிறது'' என்று சாத்தான் உரிமைகொண்டாடுவதைக் குறித்து என்ன?

மறுபடியுமாக, சாத்தான் பொய் சொல்லுவதற்கான சாத்தியக் கூறே அதிகமாக இருக்கிறது. என்றாலும் சந்தேகத்தின் பலனை அவனுக்குக் கொடுத்து அவன் உண்மையைச் சொல்லுவதாக அனுமானித்துக் கொள்ளுவோம்.

*ஆதாம்* தன்னிடம் அதை ஒப்புக்கொடுத்ததாகச் சாத்தான் சொல்ல வில்லை என்பதைக் கவனியுங்கள். நாம் ஏற்கெனவே பார்த்தபடி, ஆதாமால் அதை அவனிடம் கொடுத்திருக்க முடியாது, ஏனென்றால் முதலில் அது ஆதாமிடம் இருக்கவில்லை. ஆதாம் ராஜ்யங்களை அல்ல, மீன்களையும், பறவைகளையும், மிருகங்களையுமே ஆளுகை செய்தான். [உண்மையில் ஆதாம் வீழ்ச்சியடைந்தபோது, மக்களை ஆளுகை செய்வதற்கான ராஜ்யம் எதுவும் இருக்கவில்லை]. தீய ஆவிகளையும் இரட்சிக்கப்படாத மக்களையும் கொண்ட இருளின் ராஜ்யத்தின் ஆளுகையை இயேசுவானவருக்குக் கொடுப்பதாகச் சாத்தான் சொல்லியிருப்பான் என்றால், அதை அவன் ஆதாமின் கையிலிருந்து பெற்றிருக்க முடியாது. *ஏனென்றால் ஆதாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே அவன் விழுந்துபோன தூதர்களை ஆளுகைசெய்து கொண்டிருந்தான்.*

உலகத்தின் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அறிந்தோ அறியாமலோ தனக்குக் கீழ்ப்படிகிறபடியால் அவர்கள் உலகத்தின் அதிகாரத்தைத் தம்மிடம் கொடுத்திருப்பதாகச் சாத்தான் *சொல்லி யிருக்கலாம்.*

இதைவிடச் சிறந்த சாத்தியக்கூறு *தேவனே* அதை அவனுக்கு ஒப்புக்கொடுத்தார் என்பதாக இருக்கலாம். வேதவசனங்களை வைத்துப் பார்க்கும்போது ''எனக்குக் கீழ்ப்படியாத எல்லோரையும் ஆளுகை செய்யும்படியான எனது அனுமதியை உனக்கும் உன் தீய ஆவிகளுக்கும் கொடுக்கிறேன்'' என்று தேவன் சொல்லியிருக்கலாம். இதை இப்போது ஏற்றுக்கொள்ளுவது நமக்குக் கடினமாக இருக்கலாம். ஆனால் நாம் பார்க்கப்போகிறபடி இதுவே சிறப்பான சாத்தியக் கூறாக இருக்கக் கூடும். தேவன் மெய்யாகவே ''மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்பவராக'' இருப்பாரானால் [தானி. 4:25] சாத்தான் பெற்றிருக்கும் எந்த அதிகாரமும் அவரால் கொடுக்கப்பட்டதாகவே இருக்க வேண்டும்.





சாத்தான் இருளின் ராஜ்யத்தை மட்டுமே ஆளுகை செய்து கொண்டு இருக்கிறான். இதை ''மீறுதலின் ராஜ்யம்'' என்று நாம் அழைக்கலாம். அவன் ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்னால் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்ட திலிருந்து இந்த ராஜ்யத்தை ஆளுகைசெய்து வருகிறான். ஆதாமின் வீழ்ச்சியின் வரையில் இந்த ராஜ்யத்தில் விழுந்துபோன தூதர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனால் ஆதாம் பாவம் செய்தபோது அவனும் இந்த மீறுதலின் ராஜ்யத்தில் சேர்ந்துகொண்டான். அன்றிலிருந்து சாத்தானின் ராஜ்யத்தில் கலகம்செய்த தூதர்கள் மட்டுமின்றி, கலகம்செய்யும் மனிதர்களும் சேர்ந்துவருகிறார்கள்.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதற்கு முன்பே சாத்தான் தனது இருளின் ராஜ்யத்தை ஆளுகைசெய்து வந்தான். எனவே ஆதாம் வீழ்ச்சியடைந்த போது சாத்தான் முன்பு தன்னிடம் இல்லாத ஒன்றைப் பெற்றுக் கொண்டான் என்று நாம் நினைக்காமல் இருப்போமாக. இல்லை, ஆதாம் பாவம் செய்தபோது, ஏற்கெனவே சாத்தானால் ஆளுகை செய்யப்பட்டு வந்த இருளின் ராஜ்யமாகிய மீறுதலின் ராஜ்யத்தில் அவனும் சேர்ந்து கொண்டான்.

### மனிதனின் வீழ்ச்சி தேவனை வியப்படையச் செய்ததா?

''சாத்தான் ஆதாயம் பெற்றான்'' என்ற கொள்கையிலுள்ள மற்றொரு பிழை தேவனை முட்டாள்தனமானவராகக் காட்டுவதாகும். வீழ்ச்சியின் நிகழ்ச்சிகள் அவரைத் திகைப்படையச் செய்து, சோகமான முடிவில் ஆழ்த்தியது என்பதுபோல இந்தக் கொள்கை சித்திரிக்கிறது. சாத்தான் ஆதாமையும் ஏவாளையும் சோதிப்பான், மனிதன் விழுந்து போவான் என்பதைத் தேவன் அறிந்திருக்கவில்லையா? தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவராக இருக்கிறபடியால், என்ன நடக்கப் போகிறது என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் மனுக்குலத்தைச் சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே மனுக்குலத்தை மீட்டுக் கொள்ளுவதற்கான திட்டத்தை வகுத்தார் என்று வேதாகமம் சொல்லு கிறது [பார்க்க, மத். 25:34; அப். 2:2–23; 4:27–28; 1 கொரி. 2:7–8; எபே. 3:8–11; 2 தீமோ. 1:8–10; வெளி. 13:8].

பிசாசானவன் விழுந்துபோவான் என்று அறிந்தே தேவன் அவனைச் சிருஷ்டித்தார். ஆதாமும் ஏவாளும் விழுந்துபோவார்கள் என்பதை அறிந்தே தேவன் அவர்களைச் சிருஷ்டித்தார். சாத்தான் தந்திரமாக தேவனை ஏமாற்றி அவன் பெறக்கூடாது என்று தேவன் நினைத்திருக்கும் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை.

சாத்தான் ''உலகத்தின் அதிபதியாக'' இருக்க வேண்டும் என்று தேவன் *விரும்புகிறார்* என்று நான் சொல்லுகிறேனா? ஆமாம், தமது தெய்வீக நோக்கங்களுக்குப் பொருந்திவரும் வரையில் அவர் அதை விரும்புகிறார். சாத்தான் செயல்பட வேண்டாம் என்று தேவன் விரும்புவாரானால், வெளிப்படுத்தல் 20:1–2 வசனங்களில் சொல்லப்படு வதுபோல அவனுடைய செயல்பாட்டை அவர் நிறுத்திவிடுவார்.

என்றாலும், *எல்லோரும்* சாத்தானின் ஆளுகைக்குக் கீழாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று நான் சொல்லவில்லை. *எல்லோரும்* இரட்சிக்கப்பட்டு, சாத்தானின் ஆளுகையிலிருந்து தப்ப வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் [அப். 26:18; கொலோ. 1:13; 1 தீமோ. 2:3–4; 2 பேதுரு 3:9]. என்றாலும் இருளை நேசிப்பவர்களை [பார்க்க, யோவான் 3:19] – தமக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் செய்கிறவர்களை ஆளுகைசெய்யும்படி தேவன் சாத்தானை அனுமதிக் கிறார்.

ஆனால் மக்கள் சாத்தானின் இருளின் ராஜ்யத்திலிருந்து தப்பும்படி நம்மால் எதையாவது செய்ய முடியாதா? ஆமாம், நாம் அவர்களுக்காக ஜெபிக்கலாம். இயேசுவானவர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறபடி மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசிக்கும்படி அவர்களை அழைக்க வேண்டும். அவர்கள் விசுவாசிப்பார்களானால் சாத்தானின் அதிகாரத்தின் கீழிருந்து விடுவிக்கப்படுவார்கள். ஆனால் மக்களைத் தங்கள் பிடியில் வைத்திருக்கும் தீய ஆவிகளை ''இழுத்துப்போட'' முடியும் என்று நாம் நினைப்போமானால் அது பிழையாகும். மக்கள் இருளில் இருக்க விரும்புவார்களானால் தேவன் அப்படியே அனுமதிப்பார். சில பட்டணங் களில் இருப்பவர்கள் அவர்கள் சொல்லும் செய்தியை ஏற்றுக்கொள்ளா விட்டால் தங்கள் கால்களிலுள்ள தூசியை உதறிவிட்டு மற்றொரு பட்டணத்துக்குச் செல்லும்படியாகவே இயேசுவானவர் தமது சீஷர்களுக் குக் கட்டளையிட்டிருக்கிறார் [மத். 10:14]. அவர் அவர்களிடம் அங்கேயே இருந்து சாத்தானின் கோட்டையைத் தகர்த்து, மக்களை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக ஆக்கும்படி அவர் சொல்லவில்லை. மனந்திரும்பித் தம்மிடம் திரும்ப மறுக்கிறவர்களைத் தீய ஆவிகள் அடிமைப்படுத்திவைக்கத் தேவன் அனுமதிக்கிறார்.

## தேவன் சாத்தானின்மீது மேலான அதிகாரம் கொண்டிருக்கிறார் என்பதற்குக் கூடுதலான நிரூபணம்

மனிதனின் வீழ்ச்சியின்போது தேவன் சாத்தானின்மீதான எந்தக் கட்டுப்பாட்டையும் இழந்துவிடவில்லை என்று மேலும் பல வேத வசனங்களும் நிரூபிக்கின்றன. தேவன் எப்போதுமே சாத்தானின்மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார், கொண்டிருப்பார் என்றே வேதாகமம் உறுதிப்படுத்துகிறது. தேவனால் அனுமதிக்கப்





படுவதை மட்டுமே பிசாசானவனால் செய்ய முடியும். முதலில் இதைக் குறித்த சில பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகளை நாம் பார்ப்போம்.

யோபின் புத்தகத்தில் முதல் இரண்டு அதிகாரங்கள் தேவன் சாத்தானின்மீது கொண்டிருக்கும் அதிகாரத்தைக் காட்டும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. அங்கே சாத்தான் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக யோபின்மீது குற்றம்சாட்டுவதை நாம் காண்கிறோம். அந்த வேளையில் உலகத்தில் வேறு எவரையும்விட யோபு தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தான். எனவே சாத்தான் அவனைத் தனது குறியிலக்காகக் கொண்டான். சாத்தான் யோபின்மேல் ''கவனம் வைதிருப்பதை'' தேவன் அறிந்திருந்தார் [யோபு 1:8]. யோபு தான் பெறும் ஆசீர்வாதங்களின் காரணமாகவே தேவனைச் சேவிக்கிறான் என்று சாத்தான் குறைசொல்லுவதையும் அவர் கேட்டார் [பார்க்க, யோபு 1:9–12].

தேவன் யோபைச் சுற்றி வேலியடைத்திருக்கிறார் என்று கூறிய சாத்தான், யோபின் ஆசீர்வாதங்களை எடுத்துப்போடும்படி அவரிடம் வேண்டிக்கொண்டான். இதன் விளைவாக, சாத்தான் யோபுவை ஓரளவு துன்புறுத்த தேவன் அனுமதித்தார். துவக்கத்தில் சாத்தானால் யோபின் சரீரத்தைத் தொட முடியவில்லை. என்றாலும், கடைசியில் யோபின் சரீரத்தைத் துன்புறுத்த தேவன் சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார் ஆனால் அவனைக் கொன்றுபோடுவதைத் தடுத்தார் [யோபு 2:5–6].

சாத்தானால் தான் விரும்பிய எல்லாவற்றையும் செய்ய முடியாது என்று இந்த வேதாகமப் பகுதி நிரூபிக்கிறது. தேவன் அனுமதிக்கும் வரையில் அவனால் யோபின் உடைமைகளைத் தொட முடியவில்லை. தேவன் அனுமதிக்கும் வரையில் அவனால் யோபின் ஆரோக்கியத்தைத் திருட முடியவில்லை. தேவன் அனுமதிக்காதபடியால் அவனால் யோபைக் கொல்ல முடியாது.[84] ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகும் தேவன் சாத்தானின் மீதான கட்டுப்பாட்டைத் தம்மிடம் வைத்திருந்தார்.

## கர்த்தரால் வரவிடப்பட்ட சவுலின் பொல்லாத ஆவி

பழைய ஏற்பாட்டில் தேவன் தமது கோபாக்கினையைச் செயல்படுத்த சாத்தானின் தீய ஆவிகளைப் பயன்படுத்தியதற்குப் பல எடுத்துக்காட்டுகள்

[84] சிலர் நம்புகிற மற்றொரு கட்டுக்கதையான ''யோபு தனது பயத்தினால் சாத்தானுக்குக் கதவைத் திறந்துகொடுத்தான்'' என்ற கருத்தும் தவறானது என்பதற்கு இந்த முழுப் பகுதியும் நிரூபணமாக இருக்கிறது. தேவன்தாமே யோபுவைக் குறித்துச் சாத்தானிடம் யோபு 2:3 வசனத்தில் இவ்வாறு சொல்லி யிருக்கிறார்: ''*முகாந்தரமில்லாமல்* அவனை [யோபுவை] நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான்'' [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. *தேவனுடைய பரீட்சைகள்* என்ற என்னுடைய புத்தகத்தில் இதைக் குறித்து நான் விளக்கமாகச் சொல்லி யிருக்கிறேன்.

காணப்படுகின்றன. 1 சாமுவேல் 16:14 வசனத்தில் நாம் ‘‘கர்த்தருடைய ஆவி சவுலைவிட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது’’ என்று வாசிக்கிறோம். கீழ்ப்படியாமல் போன சவுல் ராஜாவின்மீது தேவனுடைய சிட்சை இறங்கியபடியினால்தான் இந்தச் சூழ்நிலை நேரிட்டது.

‘‘கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி’’ என்பதின் அர்த்தம் என்ன என்பதுதான் கேள்வியாகும். தேவன் தம்மோடுகூடப் பரலோகத்தில் வாசம்பண்ணிய ஒரு தீய ஆவியை அனுப்பினார் என்று இதற்கு அர்த்தமா அல்லது சாத்தானின் தீய ஆவிகளில் ஒன்று சவுலை உபத்திரவிக்கும்படி அவர் ராஜரீகமாக அனுமதித்தார் என்று இதற்கு அர்த்தமா? வேதாகமத்தின் எஞ்சிய பகுதிகள் போதிப்பதின் அடிப்படையில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இரண்டாவது விளக்கத்தையே ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கிறேன். ‘‘கர்த்தரால் வரவிடப்பட்ட’’ என்று சொல்லப்பட்டிருப்பதற்குக் காரணம், அந்த ஆவி சவுலின்மீது தேவனுடைய தெய்வீக சிட்சையின் விளைவாக வந்தது என்பதாகும். இப்படியாகத் தீய ஆவிகள் தேவனுடைய ராஜரீகமான கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம்.

நியாயாதிபதிகள் 9:23 வசனத்தில் நாம் ‘‘அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியைத் தேவன் வரப்பண்ணினார்’’ என்று வாசிக்கிறோம். அவர்களுடைய தீய செயல்களின் காரணமாகத் தேவனுடைய நியாயத் தீர்ப்பை அவர்கள் அனுபவிக்கும்படியாக இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியுமாக, இந்த ஆவி தேவனுடைய பரலோகத்திலிருந்து வந்தது அல்ல, அது சாத்தானின் ராஜ்யத்திலிருந்து வந்ததாகும். தண்டனைக் குரிய சிலருக்கு எதிராகத் தீய திட்டங்களை நிறைவேற்றும்படி அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. தேவனுடைய அனுமதியில்லாமல் தீய ஆவிகளால் எவருக்கு எதிராகவும் தீய திட்டங்களைச் செயல்படுத்த முடியாது. இது உண்மையாக இல்லாதிருக்குமானால், பிறகு தேவன் சர்வ வல்லவராக இருக்க முடியாது. எனவே ஆதாமின் வீழ்ச்சியின்போது சாத்தான் தேவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட எந்த அதிகாரத்தையும் பெற்றுக்கொல்லவில்லை என்று நாம் முடிவுசெய்ய முடியும்.

## சாத்தானின்மீது தேவனுடைய வல்லமைக்குப் புதிய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள்

சாத்தான் ஆதாயம் பெற்றான் என்ற கொள்கைக்கு எதிரான கூடுதலான நிரூபணத்தைப் புதிய ஏற்பாடு கொடுக்கிறது.

எடுத்துக்காட்டாக, லூக்கா 9:1 வசனத்தில் இயேசுவானவர் ‘‘சகல பிசாசுகளையும் துரத்த’’ தமது சீஷர்களுக்கு வல்லமையும் அதிகாரமும்





கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறோம். மேலும் லூக்கா 10:19 வசனத்தில் அவர் அவர்களிடம் ‘‘இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், *சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும்* உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது’’ என்று சொல்லியிருக்கிறார் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் சாத்தானின் *சகல வல்லமைக்கும்* எதிரான அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்றால், முதலில் அவர்தாமே அந்த அதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். சாத்தான் தேவனுடைய அதிகாரத்தின்கீழாக இருக்கிறான்.

பின்னர் லூக்காவின் சுவிசேஷத்தில் இயேசுவானவர் பேதுருவிடம் ‘‘சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்’’ என்று சொல்லியிருக்கிறார் [லூக்கா 22:31]. சாத்தான் முதலில் தேவனிடமிருந்து அனுமதியைப் பெறாவிட்டால், அவனால் பேதுருவைப் புடைக்க முடியாது என்று இந்தப் பகுதி தெளிவாக்குகிறது. மறுபடியுமாகச் சாத்தான் தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழாக இருப்பதை நாம் காண்கிறோம்.

## சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் சிறைப்பட்டிருத்தல்

வெளிப்படுத்தல் 20 ஆம் அதிகாரத்தில், ஒரே தூதன் சாத்தானைக் கட்டுவதைக் குறித்து நாம் வாசிக்கும்போது, ஆதாமின் குத்தகை முடிவடைவதுபற்றி எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. அவன் சிறைப் படுத்தப்பட்டதற்கான காரணம் எளிமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது: ‘‘ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு...’’ [வெளி. 20:2].

சுவாரசியமான காரியம் என்னவென்றால், சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் சிறைப்பட்டிருந்த பிறகு அவன் விடுவிக்கப்படுவான். அப்போது அவன் ‘‘பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்’’ [வெளி. 20:8]. இப்படி மோசம்போக்கப்பட்ட ஜாதிகள் பிறகு ஒன்றாகச் சேர்ந்து எருசலேமுக்கு எதிராக யுத்தம்பண்ண வருவார்கள். அவர்கள் பட்டணத் தைச் சூழ்ந்துகொண்டிருக்கும்போது தேவனால் வானத்திலிருந்து அனுப்பப்படும் அக்கினி அவர்களைப் பட்சித்துப் போடும் [வெளி. 20:9].

அந்த ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஆதாமின் குத்தகை இப்போது குறிப்பிடப்பட்டிருக்கும் சிறிய காலத்துக்கு மறுபடியுமாக நீட்டிக்

[85] மேலும், 1 கொரிந்தியர் 10:13 வசனத்தைப் பார்க்கவும். தேவன் நாம் சோதிக்கப்படும் அளவைக் கட்டுப்படுத்துகிறார். அதாவது, அவர் சோதனைக் காரனைக் கட்டுப்படுத்துகிறார் என்பது தெளிவாகிறது.

கப்படும் என்றும், அதற்காகவே தேவன் சாத்தானை விடுவிக்கும்படி கடமைப்பட்டிருக்கிறார் என்று எவராவது மூடத்தனமாகச் சொல்லுவார் களா? இப்படிப்பட்ட கருத்தே அபத்தமானதாக இருக்கும்.

இந்த வேதாகமப் பகுதிகளிலிருந்து மறுபடியுமாக, தேவன் சாத்தானைத் தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்றும், தமது சொந்த தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றும்படியாக மட்டுமே அவன் தனது மோசம்போக்கும் கிரியையைச் செய்ய அனுமதிக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளுகிறோம்.

இயேசுவானவரின் வரவிருக்கும் ஆயிரமாண்டு ஆளுகையின்போது சாத்தானால் செயல்பட முடியாது, அவனால் யாரையும் ஏமாற்ற முடியாது. ஆனால் கிறிஸ்துவின் ஆளுகைக்குக் கீழ்ப்படிவதுபோலப் பாசாங்கு செய்யும் மக்கள் இருப்பார்கள். ஆனால் உள்ளுக்குள் அவருடைய ஆளுகையின் வீழ்ச்சியையே அவர்கள் விரும்புவார்கள். இயேசுவானவர் ''இருப்புக்கோலால்'' ஆளுகைசெய்யும்போது, அவரை எதிர்க்க முடியாது என்பதை அறிந்து அமைதியாக இருப்பார்கள் [வெளி. 19:15].

ஆனால் சாத்தான் விடுவிக்கப்படும்போது அவனால் இருதயத்தில் இயேசுவை வெறுக்கும் இவர்களை ஏமாற்றி அவர்கள் மூடத்தனமாக முடியாத காரியத்தைச் செய்ய முயலும்படி தூண்ட முடியும். கலகம் செய்யக்கூடியவர்களை ஏமாற்றும்படி சாத்தான் அனுமதிக்கப்படும்போது, மக்களுடைய இருதயத்தின் நிலைமை வெளிப்படுத்தப்படும். அப்போது தமது ராஜ்யத்தில் வாழத் தகுதியற்றவர்களைத் தேவனால் நீதியாக நியாயந்தீர்க்க முடியும்.

சாத்தான் இன்று மக்களை ஏமாற்றும்படி தேவன் அனுமதிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். சாத்தானைக் குறித்த தேவனுடைய முழுமை யான நோக்கதைக் குறித்து நாம் பின்னர் ஆய்வு செய்வோம். எவரும் *ஏமாற்றப்பட்டவர்களாக* இருப்பதைத் தேவன் விரும்பவில்லை என்று இப்போது சொல்லுவதே போதுமானது. என்றாலும் மக்களின் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர் அறிய விரும்புகிறார். சத்தியத்தை அறிந்து அதை விசுவாசிப்பவர்களைச் சாத்தானால் ஏமாற்ற முடியாது. ஆனால் தங்கள் திருக்கான இருதயத்தின் காரணமாகச் சத்தியத்தைப் புறக்கணிப்பவர்களைச் சாத்தான் ஏமாற்றும்படி அவர் அனுமதிக்கிறார்.

அந்திக் கிறிஸ்துவின் வேலையைக் குறித்துப் பேசும்போது பவுல் இப்படி எழுதியிருக்கிறார்

> நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப் படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்





> காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், *கெட்டுப்போகிறவர் களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரி யாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத் தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்* [2 தெச. 2:8–12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அவர்கள் பொய்யை விசுவாசிக்கும்படியாகத் *தேவனே* கொடிய வஞ்சகத்தை அனுப்பினார் என்று எழுதப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆனால் இப்படி ஏமாற்றப்பட்ட மக்கள் சத்தியத்தை விசுவாசிக்காத மக்கள் என்பதையும் கவனியுங்கள். அதாவது, அவர்கள் வாய்ப்புக் கிடைத்தபோதும் சுவிசேஷத்தைப் புறக்கணித்தார்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. சாத்தான் பொய்யான அடையாளங்களாலும் அற்புதங்களாலும் அந்திக்கிறிஸ்துவைப் பலப்படுத்தும்படி தேவன் அனுமதிப்பார். இதனால் கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறவர்கள் ஏமாற்றப் படுவார்கள். தேவனுடைய இறுதியான நோக்கம் அவர்களை ''ஆக்கினாக்கு'' உள்ளாக்குவதாகும். இந்தக் காரணத்துக்காகவே சாத்தான் மக்களை ஏமாற்ற இன்று தேவன் அனுமதிக்கிறார்.

சாத்தான் இந்த உலகத்தில் செயல்படும்படி அனுமதிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லாவிட்டால் அவன் விழுந்தபோதே தேவன் அவனை பிரபஞ்சத்தின் ஏதேனும் ஓரிடத்துக்குத் தள்ளிவைத்திருப்பார். 2 பேதுரு 2:4 வசனத்தின்படி தேவன் ஏற்கெனவே பாவம் செய்த சில தூதர்களை நரகத்தில் தள்ளியிருக்கிறார். அவர்கள் ''நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.'' அது தமது தெய்வீக நோக்கத்துக்குப் பொருத்தமானதாக இருக்குமானால் தேவன் சாத்தானையும் அவனுடைய மற்றத் தூதர்களையும்கூட இப்படித் தள்ளியிருப்பார். ஆனால் தேவன் நல்ல காரணத்துக்காகவே இன்னும் சிறிது காலம் சாத்தானும் அவன் தூதர்களும் உலகத்தில் செயல்பட அனுமதிக்கிறார்.

### வேதனைப்படுத்தப்படுவது குறித்த பிசாசுகளின் பயம்

இந்தக் குறிப்பிட்ட கட்டுக்கதையைக் குறித்த நமது ஆய்வை முடிக்கும்போது, கெர்கெனேசர் நாட்டுப் பிசாசுகளைக் குறித்த வேதாகம எடுத்துக்காட்டை நாம் பார்க்க வேண்டும்:

> அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டு பேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்த படியால், அந்த வழியியாக ஒருவனும் நடக்கக் கூடா திருந்தது. அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? *காலம் வருமுன்னே எங்களை வேதனைப் படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்* [மத். 8:28–29 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

சாத்தானுக்கு ஆதாயம் வந்தது என்ற கொள்கையைக் கொண்டவர்கள் தங்களுக்கு ஆதரவாக இந்த நிகழ்ச்சியை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். ''இயேசுவானவர் நீதியாகச் செயல்பட வேண்டும் என்று இந்தப் பிசாசுகள் விண்ணப்பிக்கின்றன. ஆதாமின் குத்தகை முடியும் வரையில் இவைகளை வேதனைப்படுத்த அவருக்கு அதிகாரம் கிடையாது. அப்போது சாத்தானும் அவனுடைய தூதர்களும் நித்தியமாக வேதனையை அனுபவிக்கும்படி அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள்'' என்று இவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் இதற்கு எதிரானதுதான் உண்மையாகும். இயேசுளானவர் தாம் விரும்பியபடி எந்த நேரத்திலும் அவைகளை வேதனைப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை அவை அறிந்திருந்தன. எனவேதான் இரக்கம் காட்டும்படி அவரிடம் விண்ணப்பித்தன. தேவனுடைய குமாரன் காலத்துக்கு முன்பாகவே தங்களைத் துன்பப் படுத்தப்படும்படி அனுப்பிவிடுவாரோ என்று அவை அதிகமாகப் பயப்பட்டன. ''தங்களைப் பாதாளத்திலே போகக் கட்டளையிடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக்கொண்டன'' என்று லூக்கா எழுதியிருக் கிறார் [லூக்கா 8:31]. பிசாசானவன் சட்டப்படியான அதிகாரத்தைப் பெற்றிருப்பான் என்றால் அவை இயேசுவானவரைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இல்லையே?

தாங்கள் முழுவதுமாக இயேசுவின் இரக்கத்தின்கீழாக இருப்பதை இந்தப் பிசாசுகள் அறிந்திருந்தன. தங்களை அந்தத் திசையிலிருந்து விரட்டிவிடக் கூடாது [மாற்கு 5:10], அருகிலிருந்த பன்றிக் கூட்டத் தில் நுழைய அனுமதிக்க வேண்டும் [மாற்கு 5:12], பாதாளத்திலே போகக் கட்டளையிடக்கூடாது [லூக்கா 8:31], மற்றும் தங்களைத் துன்புறுத்த வேண்டாம் என்றெல்லாம் அவை வேண்டிக்கொண்டதற்குக் காரணம் இதுவேயாகும்.





## கட்டுக்கதை # 4: '''உலகத்தின் அதிபதியாகிய' சாத்தான் மானிட ராஜ்யங்கள், இயற்கை அழிவுகள், பருவநிலை உட்பட உலகத்திலுள்ள எல்லாவற்றின்மீதும் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறான்.

சாத்தானை இந்தப் ''பிரபஞ்சத்தின் தேவன்'' என்று பவுலும் [2 கொரி. 4:4], ''உலகத்தின் அதிபதி'' என்று இயேசுவும் [யோவான் 12:31: 14:30: 16:11] அழைத்திருக்கிறார்கள். இதன் அடிப்படையில் பலர் சாத்தான் உலகத்தின்மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறான் என்று அனுமானித்திருக்கலாம். இந்தக் குறிப்பிட்ட கட்டுக் கதை எவ்வளவு பிழையானது என்பதை நாம் பல எடுத்துக்காட்டுகளின் மூலம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். என்றாலும் சாத்தானின் சக்தி எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கிறது என்பதை அறிய இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். சாத்தானைக் குறித்த நமது முழுமையான அறிவு அவனை தேவன் அல்லது அதிபதி என்று சொல்லும் நான்கு வசனங்களின் அடிப்படை யிலானதாக மட்டும் இருக்கக் கூடாது.

வேதாகமத்தை நாம் இன்னுமதிகமாக ஆராய்ந்து பார்க்கும்போது, இயேசுவானவர் சாத்தானை ''உலகத்தின் அதிபதி'' என்று அழைத்தது மட்டுமின்றி, தமது பிதாவானவரை ''வானத்துக்கும் *பூமிக்கும்* ஆண்டவர்'' என்றும் அழைத்திருக்கிறார் [மத். 11:25: லூக்கா 10:21 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. அதுமட்டுமின்றி, பவுல் சாத்தானைப் பிரபஞ்சத்தின் தேவன் என்று அழைத்தது மட்டுமின்றி, அவரும் தேவனை ''வானத்திற்கும் *பூமிக்கும்* ஆண்டவர்'' என்று அழைத் திருக்கிறார் [அப். 17:24 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இயேசுவோ அல்லது பவுலோ சாத்தான் உலகத்தின்மீது முழுமையான கட்டுப் பாட்டை வைத்திருக்கிறான் என்று நாம் நம்புவதை விரும்பவில்லை என்பதை இது நிரூபிக்கிறது. சாத்தானின் அதிகாரம் கட்டுப்பாட்டுக்கு உள்ளானதாகும்.

*உலகம்* அல்லது *பிரபஞ்சத்துக்கும் பூமி* என்ற சொல்லுக்கும் இடையேயுள்ள வேறுபாடே இங்கே முக்கியமானதாக இருக்கிறது. நாம் இந்த இரண்டு சொற்களையும் ஒரே அர்த்தப்படும்படி மாற்றிமாற்றிப் பயன்படுத்தினாலும், மூல கிரேக்க மொழியில் பெரும்பாலும் இரண்டும் ஒன்றாக இருக்கவில்லை. அவைகளின் அர்த்தங்களிலுள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ளும்போது, உலகத்தின்மீதான சாத்தான் மற்றும் தேவனுடைய அதிகாரத்தைக் குறித்து இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ளுகிறோம்.

இயேசுவானவர் பிதாவாகிய தேவனைப் பூமியின் ஆண்டவர் என்று அழைத்திருக்கிறார். இங்கே *ஜி* என்ற கிரேக்கச் சொல்லே பூமி என்று

மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இது நாம் வாழும் கிரகத்தைக் குறிக்கிறது. இந்தச் சொல்லிலிருந்தே ஜியாக்ரபி என்ற ஆங்கிலச் சொல் உருவாகியிருக்கிறது.

ஆனால் சாத்தான் *உலகத்தின்* அதிபதி என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். இங்கே *காஸ்மோஸ்* என்ற கிரேக்கச் சொல் *உலகம்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது அடிப்படையில் ஒழுங்குபடுத்துதலைக் குறிக்கிறது. இது கிரகத்தைக் குறிக்காமல் அதில் வாழும் *மக்களைக்*குறிக்கிறது. எனவேதான் கிறிஸ்தவர்கள் சாத்தானை ''உலக ஒழுங்கமைப்புக்குக் கடவுள்'' என்று அழைக்கிறார்கள்.

தற்போது தேவன் *உலகத்தின்மீது* முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஏனென்றால் அவர் உலகத்தின் எல்லா *மக்களின்மீதும்* முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. அவர் ஒவ்வொருவருக்கும் யார் தனது எஜமானர் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமையைக் கொடுத்திருப்பதே இதற்குக் காரணமாகும். பலர் சாத்தானுக்குப் பற்றுறுதியோடு இருப்பதைத் தெரிந்தகொண்டிருக்கிறார்கள். மனிதருடைய சுயாதீன சித்தம் என்பது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

பவுல் *பிரபஞ்சத்தின்* தேவன் என்று எழுதியபோது அவர் *அயோன்* என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். *அயோன்* என்ற சொல் பெரும்பாலும் காலகட்டம் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இது சாத்தானின் காலகட்டமாகும்.

இவை எல்லாவற்றுக்கும் அர்த்தம் என்ன? *பூமி* என்பது நாம் வாழும் கிரகமாகும். *உலகம்* என்பது இப்போது வாழும் மக்களை, குறிப்பாக, இயேசுவானவரைச் சேவிக்காத மக்களைக் குறிக்கிறது. அவர்கள் சாத்தானைச் சேவிக்கிறார்கள், அவனுடைய பாவகரமானதும், திருக்குள்ளதுமான ஒழுங்குமுறையில் சிக்கியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் ''உலகத்திலிருந்தாலும்'' ''உலகத்தாரல்ல'' [யோவான் 17:11, 14]. நாம் இருளின் ராஜ்யத்தின் குடிமக்களின் மத்தியில் வாழ்ந்தாலும், நாம் உண்மையில் தேவனுடைய ராஜ்யமாகிய ஒளியின் ராஜ்யத்தில் இருக்கிறோம்.

இப்போது நமகுப் பதில் கிடைத்துவிட்டது. தேவன் ராஜரீகமாக முழுப் பூமியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். சாத்தான் தேவனுடைய அனுமதியின்பேரில் ''உலக ஒழுங்கமைப்பின்மீது'' கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறான். இப்படியாக அவன் தனது இருளின் ராஜ்யத்திலுள்ள மக்களைக் கட்டுப்படுத்துகிறான். இதன் காரணமாகத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் ''உலகமுழுவதும் [*பூமி* அல்ல] பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்'' என்று எழுதியிருக்கிறார் [1 யோவான் 5:19].





இதனால் தேவனுக்கு *உலகத்தின்மீதும்*, உலக *ஒழுங்கமைப்பின் மீதும்*, உலகத்தின் மக்களின்மீதும் அதிகாரம் இல்லை என்று ஆகிவிடாது. தானியேல் சொல்லுகிறபடி அவர் ''மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார்'' [தானி. 4:25]. இப்போதும் அவர் விரும்பும் எந்த நபரையும் உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ அவரால் முடியும். என்றாலும், அவர் ''மனுஷ ராஜ்யத்தில் ஆளுகைசெய்கிறவராக'' இருக்கிறபடியால், தமக்கு விரோதமான மக்களின்மீது சாத்தான் ஆளுகை செய்யும்படி ராஜரீகமாக அனுமதி கொடுத்திருக்கிறார்.

### சாத்தான் கொடுப்பதாகச் சொல்லியது என்ன?

உலகத்துக்கும் பூமிக்கும் இடையேயுள்ள இந்த வேறுபாடு இயேசுவானவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கிறது. அங்கே சாத்தான் இயேசுவுக்கு ''உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும்'' காண்பித்தான். சாத்தானால் மானிட அரசுகளின் ஆளுகைப் பொறுப்பைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்க முடியாது. அதாவது அதிபர் அல்லது பிரதமரின் பதவியைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்க முடியாது. ஏனென்றால் சாத்தான் அல்ல, தேவனே ஆளுகை செய்கிறவர்களை உயர்த்துகிறார்.

இதற்கு மாறாக, சாத்தான் தன்னுடைய இருளின் ராஜ்யத்தின் துணை அரசுகளையே இயேசுவுக்குக் காட்டியிருக்க வேண்டும். அவன் இயேசுவுக்குத் தீய ஆவிகளின் ஆளுகை வரிசையையும், அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட மனிதர்களையுமே அவருக்குக் காட்டியிருக்க வேண்டும். தேவனுக்கு எதிரான தனது கலகத்தில் இயேசுவும் சேர்ந்து கொள்ளுவாரானால் அவருக்குத் தனது ஆளுகையில் கட்டுப்பாட்டைக் கொடுப்பதாகச் சாத்தான் முன்வந்தான். இயேசு அதை ஏற்றுக்கொண்டிருந்தால் இருளின் ராஜ்யத்தின் ஆளுகையில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பார்.

### உலக அரசுகளின்மீதான தேவனுடைய கட்டுப்பாடு

நாம் முதலில் உலக அரசுகளின்மீதான தேவனுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வசனங்களைப் பார்ப்பதின்மூலம் சாத்தானின் அதிகாரம் எவ்வளவு குறுகியதாக இருக்கிறது என்பதைப் பார்ப்போம். சாத்தான் இரட்சிக்கப்படாத மக்களின்மீது ஓரளவு அதிகாரத்தைப் பெற்றிருக்கிறபடியால், அரசுகள் பெரும்பாலும் இரட்சிக்கப்படாத மக்களால் கட்டுப்படுத்தப்படுவதால் அவன் மானிட அரசுகளின்மீதும் ஓரளவு அதிகாரத்தைப் பெற்றிருக்கிறான். ஆனால் தேவன் மானிட அரசுகளின் மீது இறுதியான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். தேவன் அனுமதிக்கும் அளவுவரையில் மட்டுமே சாத்தானால் அவர்களைக் கையாள முடியும்.

நேபுகாத்நேச்சார் ராஜாவிடம் தானியேல் சொல்லியதைக் குறித்து நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஆனாலும் அது அதிகமான விளக்கத்தைக் கொடுக்கிறபடியால் அதை மறுபடியுமாகப் பார்ப்போம்.

தனது அதிகாரபலம் மற்றும் சாதனைகளின் காரணமாகப் பேரரசனான நேபுகாத்நேச்சார் அதிகமாகப் பெருமை கொண்டிருந்தான். அதனால் அவன் ''உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்'' [தானி. 4:17] என்பதை உணரும் வரையில் அவனைத் தாழ்மைப்படுத்தும்படி தேவன் தீர்மானித்தார். நேபுகாத்நேச்சார் அரசியல்ரீதியாக உயர்ந்த நிலையை எட்டியதற்குத் தேவனே காரணமாக இருக்கிறார். உலகின் எந்தத் தலைவரைப் பொருத்தவரையிலும் இதுவே உண்மையாகும். உலகில் ஆளுகைசெய்கிறவர்களைக்குறித்துக் குறிப்பிடும்போது பவுல் அப்போஸ்தலன் ''ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது'' என்று எழுதியிருக்கிறார் [ரோமர் 13:1].

தேவனே முழுப் பிரபஞ்சத்தின்மீதும் ஆதியிலிருந்தே முழு அதிகாரத்தையும் கொண்டவராக இருக்கிறார். எவரேனும் ஏதாவது அதிகாரத்தைப் பெற்றிருப்பார் என்றால் தேவன் அதைக் கொடுத்திருப்பார் அல்லது அனுமதித்திருப்பார்.

ஆனால் ஆளுகைசெய்பவர்களில் தீயவர்களைக்குறித்து என்ன? அவர்களும் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பவுல் சொல்லுகிறாரா? ஆமாம், அப்படித்தான் சொல்லுகிறார். இதே நிருபத்தில் பவுல் ஏற்கெனவே ''மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது'' என்று அவர் எழுதியிருக்கிறார் [ரோமர் 9:17]. தேவன் தம்மைத்தாமே மகிமைப்படுத்தும் நோக்கத்தோடு இருதயக் கடினம்கொண்டிருந்த பார்வோனை உயர்த்தினார். அவர் உயர்த்திய பிடிவாதமுள்ள மனிதனின் காரணமாகவே அவரால் தமது மக்களை விடுவிப்பதற்காகப் பெரிய அற்புதங்களைச் செய்து, தமது வல்லமையைக் காட்ட முடிந்தது.

பிலாத்துவோடு இயேசுவானவர் பேசியபோதும் இந்த உண்மை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் தன்னுடைய கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் இருப்பதைக் கண்டு வியப்படைந்த பிலாத்து அவரிடம் ''நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா'' என்று கேட்டான் [யோவான் 19:10].





இயேசுவானவர் அவனுக்கு ''*பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால்*, என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது'' என்று பதிலளித்தார் [யோவான் 19:11 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இயேசுவானவர் சிலுவையில் மரிக்க வேண்டும் என்ற தமது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே தேவன் கோழையாக இருந்த பிலாத்துவை உயர்த்தியிருந்தார்.

பழைய ஏற்பாட்டை நாம் வாசிக்கும்போது, தேவன் சில வேளைகளில் தண்டிக்கப்பட வேண்டியவர்களின்மீது தமது கோபாக்கினையைச் செயல்படுத்தும்படியாகத் தீய ராஜாக்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். பல பழைய ஏற்பாட்டுத் தேசங்களின்மீது தமது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரத் தேவன் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தியிருக்கிறார்.

தேவன் உயர்த்திய அல்லது தாழ்த்திய பல ராஜாக்களைக் குறித்த எடுத்துக்காட்டை நாம் வேதாகமத்தில் காணலாம். எடுத்துக்காட்டாக, நாம் புதிய ஏற்பாட்டில் ஏரோது ராஜாவைக்குறித்து வாசிக்கிறோம். அவனுடைய குடிமக்களில் சிலர் ''இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம்'' என்று ஆர்ப்பரித்தபோது, அவன் தேவனுக்கு மகிமையைக் கொடுக்கத் தவறினான் [அப். 12:22].

இதன் விளைவு என்ன? ''அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்'' [அப். 12:23].

ஏரோது சாத்தானின் ராஜ்யத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பவில்லை என்பதைக் கவனியுங்கள். தேவன் விரும்பினால் இப்போது உலகத்தில் ஆளுகை செய்துகொண்டிருக்கும் எவரையும் அவரால் கீழே கொண்டுவர முடியும்.[86]

[86] தேவன் தாம் விரும்புகிறவர்களை நம்மீது ஆளுகைசெய்யும்படி உயர்த்துகிறார் என்கிறபடியால் நாம் அரசுத் தலைவர்களுக்காக ஜெபிக்கக்கூடாது என்றோ அல்லது தேர்தலில் வாக்களிக்கக் கூடாது என்றோ அர்த்தமாகுமா? இல்லை. ஒரு ஜனநாயகத்தில் தேவனுடைய கோபாக்கினை செயல்பூர்வமாகிறது. நாம் யாருக்கு வாக்களிக்கிறோமோ அவரைப் பெறுகிறோம். தீய மக்கள் பெரும்பாலும் தீய மக்களையே தெரிந்தெடுக்கிறார்கள். இதனால்தான் நீதிமான்களும் தங்கள் வாக்கை அளிக்க வேண்டும். மேலும், நாம் அரசின் தலைவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டிலும் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது [எரே. 29:7; 1 தீமோ. 2:1–4]. தேவன் யாரைப் பதவியில் வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறாரோ அதில் நாம் தாக்கம் விளைவிக்க முடியும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு சில வேளைகளில் தீய அரசுத் தலைவர்களின் மூலமாக வருகிறபடியாலும், பெரும்பாலான தேசங்கள் தண்டிக்கப்படப் பாத்திரமானவையாக இருக்கிறபடியாலும், நமது நாடு அதற்குத் தகுதியான *எல்லாத் தண்டனையையும்* பெறாதிருக்கும்படி இரக்கம் காட்டுவதற்காக அவரிடம் ஜெபித்துப் பெறலாம்.

## தேவனுடைய தனிப்பட்ட சாட்சி

இறுதியாக, தேவன்தாமே உலகத்தில் மானிடரின் ராஜ்யங்களின் மீதான தமது இராஜரீக அதிகாரத்தைக் குறித்து என்ன சொல்லியிருக் கிறார் என்பதை நாம் பார்ப்போம்:

> ''இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்தது போல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள். பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்'' [எரேமியா 18: 6–10].

வனாந்தரத்தில் இயேசுவைச் சோதித்த சாத்தானால், எந்த வகையிலும் அவருக்கு உலகத்திலுள்ள மனிதர்களின் அரசியல்ரீதியான ராஜ்யங்களின் ஆளுகையைச் சட்டபூர்வமாகக் கொடுக்க முடியாது என்பதை இப்போது கண்டுகொண்டீர்களா? அவன் உண்மையைச் சொல்லியிருப்பானானால் [அவன் சில வேளைகளில் சொல்லு வதுண்டு] அவனால் கொடுக்க முடிந்ததெல்லாம் அவனுடைய இருளின் ராஜ்யத்தின் கட்டுப்பாட்டை மட்டுமே.

ஆனால் மானிட அரசுகளின்மீது சாத்தான் *செல்வாக்கைப்* பெற்றிருக்கிறானா? ஆமாம், இரட்சிக்கப்படாத மக்களே மானிட அரசுகளில் ஈடுபட்டிருப்பதினாலும், அவனே இரட்சிக்கப்படாத மக்களின் ஆண்டவராக இருப்பதினாலுமே அவன் செல்வாக்கைப் பெற்றிருக்கிறான். என்றாலும், தேவன் அனுமதிக்கும் அளவுக்கே அவன் செல்வாக்கைப் பெற்றிருக்கிறான். தேவன் தாம் விரும்பினால் எந்த வேளையிலும் சாத்தானின் திட்டங்களை முறியடிக்கக்கூடியவராக இருக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான் ''பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்து'' என்று குறிப்பிட்டிருக்கிறார் [வெளி. 1:5].





## சாத்தானால் இயற்கை அழிவுகளையும், மோசமான பருவநிலையையும் உண்டாக்க முடியுமா?

சாத்தான் ''உலகத்தின் அதிபதியாக'' இருக்கிறபடியால், அவன் பருவநிலையைக் கட்டுப்படுத்துகிறான் என்றும், அவனே பஞ்சங்கள், வெள்ளங்கள், புயல்கள் மற்றும் பூமியதிர்ச்சிகளுக்குக் காரணமானவன் என்றும் சிலர் அனுமானிக்கிறார்கள். ஆனால் வேதாகமம் இப்படிப் போதிக்கிறதா? மறுபடியுமாக, ''திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்'' [யோவான் 10:10] என்ற ஒரே வசனத்தின் அடிப்படையில் சாத்தானைக் குறித்த இறையியலைக் கட்டியெழுப்புவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். திருடுவதும், கொல்லுவதும், அழிப்பதுமாக இருக்கும் எந்தக் காரியமும் சாத்தானிடமிருந்து வருகிறது என்பதற்கு ஆதாரமாக மக்கள் இந்த வசனத்தை எடுத்துக்காட்டுவதை நாம் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் நாம் வேதாகமத்தை இன்னுமதிகமாக ஆராய்ந்து பார்க்கும்போது, தேவனே சில வேளைகளில் கொல்லுகிறவராகவும் அழிக்கிறவராகவும் இருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். பல எடுத்துக்காட்டுகள் இருந்தாலும் இந்த மூன்று பகுதியை மட்டும் பார்ப்போம்:

> நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் *அழிக்கவும்* வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்? [யாக். 4:12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> நீங்கள் இன்னாருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: *கொலைசெய்த பின்பு* நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங் கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக் குச் சொல்லுகிறேன் [லூக்கா 12:5 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].
>
> ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே *அழிக்க* வல்லவருக்கே பயப்படுங்கள் [மத். 10:28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கொல்லுவதையோ அல்லது அழிப்பதையோ கொண்டிருக்கும் எல்லாக் காரியமும் சாத்தானுடையது என்று நாம் சொல்லுவோமானால், நாம் சொல்லுவது தவறாகும். தேவன் கொல்லுவதற்கும் அழிப்பதற்கும் வேதாகமத்தில் பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

*இயேசுவானவர் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வரும் திருடனைப் பற்றிச் சொல்லியபோது அவர் மெய்யாகவே சாத்தானைப்*

*பற்றி இப்படிச் சொன்னாரா?* என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். அவர் சொல்லிய வார்த்தைகளைப் பின்னணி யோடு சேர்த்து வாசித்துப் பார்த்தால் போதுமானது. திருடவும், கொல்லவும், அழிக்கவும் வரும் திருடனைக் குறித்து அவர் சொல்லி யதற்கு ஒரு வசனத்துக்கு முன்பாக அவர் ''எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை'' என்று சொல்லியிருக் கிறார் [யோவான் 10:8]. யோவான் 10:1–15 வசனங்களில் இயேசுவின் முழுச் சொற்பொழிவையும் நாம் வாசிக்கும்போது, தன்னை நல்ல மேய்ப்பன் என்று குறிப்பிடும் அவர், கள்ளப் போதகர்களையும், சமயத் தலைவர்களையுமே திருடர்கள் என்று அழைக்கிறார் என்பது தெளிவாகிறது.

## மோசமான பருவநிலை மற்றும் இயற்கை அழிவுகளைக் குறித்த வெவ்வேறு கண்ணோட்டங்கள்

ஒரு சூறாவளியோ அல்லது பூமியதிர்ச்சியோ பாதிப்பை உண்டு பண்ணும்போது அது தேவனை விசுவாசிக்கும் மக்களின் மனதின் ஒரு இறையியல் கேள்வியை எழுப்புகிறது. ''இதை உண்டாக்குவது யார்?'' வேதாகமத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களுக்கு இரண்டு சாத்தியக் கூறுகள் மட்டுமே இருக்கின்றன – தேவன் அல்லது சாத்தான் இவைகளை விளைவிக்க வேண்டும்.

''இல்லை, இல்லை! தேவனைக் குற்றம்சாட்டக் கூடாது! மக்களையே குற்றம்சாட்ட வேண்டும். தேவன் மக்களை *அவர்களுடைய* பாவங்களுக்காகத் தண்டிக்கிறார்'' என்று சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

பாவத்தின்மீதான நியாயத்தீர்ப்பின் காரணமாகத் தேவனே சூறாவளி களையும், பூமியதிர்ச்சிகளையும் விளைவிப்பவராக இருப்பாரானால், தேவன்மீது *பழியைச்* சுமத்தாமல் மீறுதல் செய்யும் மனிதர்களின்மீது குற்றம் சுமத்தலாம். ஆனால், அவருடைய கட்டளையில்லாமல் இயற்கை அழிவுகள் உண்டாகாது என்கிறபடியால் தேவன் *பொறுப்பாக* இருக்கிறார்.

அல்லது பாவிகளின்மீதான தமது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவர சாத்தான் சூறாவளியையும், பூமியதிர்ச்சியையும் அனுப்பும்படி தேவன் *அனுமதிப்பாரானால்,* சாத்தானே அவைகளை விளைவிக்கிறான் என்று நாம் சொல்லலாம். என்றாலும் தேவனே பொறுப்பானவராக இருக்கிறார். ஏனென்றால், *அவரே* அழிவைக் கொண்டுவர சாத்தானை அனுமதித்தபடியாலும், பாவத்துக்கான *அவருடைய* தண்டனையின் காரணமாக இவை வந்தபடியினாலும், அவரே பொறுப்பானவராக இருக்கிறார்.

சிலர் சூறாவளிகளுக்கும் பூமியதிர்ச்சிகளுக்கும் தேவனோ அல்லது சாத்தானோ பொறுப்பானவர்கள் அல்ல, அது ''பாவத்தில் விழுந்துபோன





உலகத்தின் இயற்கையான பின்விளைவு'' என்று சொல்லுகிறார்கள். இவர்களும் இயற்கையின் அழிவுகளுக்காக மனிதர்களைக் குற்றம் சாட்டவே முயன்றாலும், முக்கியமானதை விட்டுவிட்டார்கள். சூறாவளிகள் ''பாவத்தில் விழுந்துபோன உலகத்தின் இயற்கையான பின்விளைவாக'' இருக்குமானால், அவை அப்படியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தது யார்? சூறாவளிகள் மனிதனால் *உண்டாக்கப் பட்டவை* அல்ல என்பது நிச்சயம். ஒரு குறிப்பிட்ட அளவு பொய்கள் வான வெளியில் பரவும்போது அவை சூறாவளியை உண்டுபண்ணுவதில்லை. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் விபசாரத்தில் ஈடுபடும்போது பூமியதிர்ச்சி உண்டாவதில்லை.

பாவத்துக்கும் சூறாவளிக்கும் இடையே தொடர்பு இருக்குமானால், தேவன் அதில் ஈடுபட்டிருக்கிறார். ஏனென்றால் சூறாவளிகள் பாவத்தின் மீதான அவருடைய நியாயத்தீர்ப்பின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று தொடர்பில்லாதவையாக வந்தாலும், அவை அப்படித் தொடர்பில்லாதவையாக வர வேண்டும் என்று தேவனே கட்டளையிட்டிருக்கிறபடியால், அவர் இதில் ஈடுபட்டிருக்கிறார்.

பாவத்துக்கும் இயற்கை அழிவுகளுக்கும் இடையில் தொடர்பு *இல்லை* என்றாலும், தேவன் உலகத்தை வடிவமைத்தபோது அவர் தவறு செய்துவிட்டிருக்கிறார். அதன் விளைவாகவே பூமியின் மேற்பரப்பில் அசைவு உண்டாகிப் பூமியதிர்ச்சிகளும், பருவநிலை மாற்றங்களும் உண்டாகின்றன. இப்போதும் சூறாவளிகளுக்கும் பூமியதிர்ச்சிகளுக்கும் தேவனே பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய தவறுகளினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கும்.

## ''இயற்கை அன்னை'' என்று எதுவும் கிடையாது

எனவே இயற்கை அழிவுகளை உண்டாக்குவது யார் என்ற கேள்விக்கு இரண்டு பதில்கள் மட்டுமே உள்ளன. தேவனோ அல்லது சாத்தானோ பொறுப்பாக இருக்கிறார்கள். எந்தப் பதில் சரியானது என்பதைக் கண்டறிவதற்குக் குறிப்பிட்ட வேதவசனங்களை எடுத்துப் பார்ப்பதற்கு முன்பாக, இந்த இரண்டு பதில்களையும் குறித்து இன்னுமதிகமாகச் சிந்திப்போம்.

சாத்தானே இயற்கை அழிவுகளை உண்டாக்குகிறவனாக இருப்பான் *என்றால்,* தேவனால் அவனைத் தடுக்க முடியும் அல்லது தடுக்க முடியாது. சாத்தான் இயற்கை அழிவுகளை உண்டாக்குவதைத் தடுக்கத் தேவனால் *முடிந்தும்* அவர் அப்படித் தடுக்காமல் இருப்பாரானால், அவர் மறுபடியுமாகக் கொஞ்சம் பொறுப்பை ஏற்க வேண்டியவராக இருக்கிறார். அவருடைய அனுமதியில்லாமல் அந்த அழிவு ஒருபோதும் உண்டாகி யிருக்காது.

இப்போது மறுபக்கத்துக்குப் போவோம். தேவனால் சாத்தானைத் தடுக்க *முடியாது*, ஆனால் தடுக்க விரும்புகிறார் என்று ஒரு கணம் அனுமானிப்போம். இப்படியும் நடக்கக் கூடுமா?

ஒரு இயற்கைப் பேரழிவை உண்டாக்குவதிலிருந்து தேவனால் சாத்தானைத் தடுக்க முடியவில்லை என்றால், சாத்தான் தேவனைவிட அதிக வல்லமையுள்ளவனாக இருக்க வேண்டும் அல்லது அதிக புத்திசாலியாக இருக்க வேண்டும். ''ஆதாமின் வீழ்ச்சியின்போது சாத்தான் உலகத்தின்மீதான கட்டுப்பாட்டைப் பெற்றான்'' என்ற கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் கூறுவதின் அர்த்தம் இதுதான். சாத்தான் ஆதாமின் குத்தகையைத் திருடிக்கொண்டிருக்கிறபடியால், உலகத்தில் தான் விரும்பும் எதையும் செய்யும் சட்டரீதியான உரிமையைப் பெற்றிருக்கிறான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆதாமுக்குக் கொடுத்த குத்தகையை இப்போது சாத்தான் பெற்றிருக்கிறபடியால், தேவன் அதை மதிக்க வேண்டியவராக இருக்கிறார். அதனால், அவர் சாத்தானைத் தடுக்க விரும்பினாலும் அவரால் அதைச் செய்ய முடியவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது வீழ்ச்சியின்போது என்ன நடக்கும் என்பதை முன்னரே காண முடியாத அளவுக்குத் தேவன் மூடனாக இருந்திருக்கிறார் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சாத்தான் அதிகப் புத்திசாலியாக இருக்கிறபடியால், தேவன் அவன் பெறக்கூடாது என்று விரும்பிய அதிகாரத்தை இப்போது பெற்றிருக்கிறான். தனிப்பட்ட முறையில், சாத்தான் தேவனைவிட அதிக ஞானமுள்ளவன் என்று நான் சொல்லப் போவதில்லை.

''சாத்தான் ஆதாயம்பெற்றான்'' என்ற கொள்கை உண்மையாக இருக்குமானால், சாத்தான் ஏன் இன்னுமதிகமான சூறாவளிகளையும், பூமியதிர்ச்சிகளையும் விளைவிக்கவில்லை? அவன் ஏன் கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் தாக்குதல் தொடுக்கவில்லை? [''அவன் கிறிஸ்தவர்களைத் தாக்க தேவன் விடமாட்டார்'' என்று நீங்கள் சொல்லுவீர்களானால் தேவனுடைய அனுமதியில்லாமல் அவனால் எதையும் செய்ய முடியாது என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டதாக ஆகிவிடும்].

நமது கேள்விகளுக்குச் சாத்தியமாக இருக்கக்கூடிய பதில்கள் இரண்டாகும்: 1] தேவன் சூறாவளிகளையும், பூமியதிர்ச்சிகளையும் விளைவிக்கிறார். அல்லது 2] *தேவனுடைய அனுமதியோடு* சாத்தான் அதைச் செய்கிறான்.

இதில் எந்தப் பதில் சரியானதாக இருந்தாலும், தேவனே பொறுப்பானவர் என்பதை உங்களால் காண முடிகிறதா? ''தேவன் சூறாவளியை அனுப்பவில்லை – தேவனுடைய அனுமதியோடு சாத்தான் அதை அனுப்பினான்'' என்று மக்கள் சொல்லுபோது, அது அவர்கள் நம்புகிறபடி தேவனை விடுவிக்கவில்லை. தாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டா





லும் சரி, சாத்தான் சூறாவளியை விளைவிப்பதைத் தேவனால் தடுக்க முடிந்திருக்குமானால், தடுக்காததற்கு அவரே பொறுப்பானவராக இருக்கிறார். சூறாவளியானது தேவனால் நியாயத்தீர்ப்புக்காக அனுப்பப்பட்டிருக்குமானால், அல்லது அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமானால் மீறுதல் செய்த மனிதர்களே இதற்காகக் குற்றம் சுமத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் தேவன் எந்தவகையிலும் ஈடுபடவில்லை அல்லது பொறுப்பாகவில்லை என்று சொல்லுவது மூடத்தனமாகும்.

## வேதவசனங்களின் சாட்சி

''இயற்கை அழிவுகளைக்'' குறித்து வேதாகமம் திட்டவட்டமாகச் சொல்லுவது என்ன? தேவன் அதை விளைவிக்கிறாரா அல்லது பிசாசு அதை விளைவிக்கிறானா, வேதாகமம் என்ன சொல்லுகிறது? வேதாகமத்தில் பல பூமியதிர்ச்சிகளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவைகளை முதலில் பார்ப்போம்.

வேதாகமத்தின்படி, பாவம் செய்து நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரராக இருக்கும் பாவிகளின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் காரணமாகப் பூமியதிர்ச்சிகள் உண்டாகும். எரேமியாவின் புத்தகத்தில் நாம் ''அவருடைய [தேவனுடைய] கோபத்தினால் *பூமி அதிரும்*; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்'' என்று வாசிக்கிறோம் [எரே. 10:10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஏசாயா இப்படி எச்சரிக்கிறார்:

> இடிகளினாலும், பூமி அதிர்ச்சியினாலும், பெரிய இரைச்சலினாலும், பெருங்காற்றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்கினிஜுவாலையினாலும், சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப்படுவாய் [ஏசாயா 29:6, அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

மோசேயின் நாட்களில் கலகம் செய்த கோராகையும் அவனுடைய மனிதர்களையும் பூமி பிளந்து விளங்கிப்போட்டது என்பதை நாம் அறிவோம் அல்லவா? [பார்க்க, எண். 16:23–34]. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கிரியை என்பது தெளிவாகத் தெரிகிறது. [பூமியதிர்ச்சியின் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்து மேலும் பார்க்க, எசே. 38:19; சங். 18:7; 77:18; ஆகாய் 2:6; லூக்கா 21:11; வெளி. 6:12; 8:5; 11:13; 16:18].

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பூமியதிர்ச்சிகள் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் காரணமாக உண்டாகியவையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எடுத்துக்காட்டாக, மத்தேயு சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி இயேசுவானவர் மரித்தபோது ஒரு பூமியதிர்ச்சியும் [மத். 27:51, 54], அவர் உயிர்த்தெழுந்தபோது ஒரு

பூமியதிர்ச்சியும் [மத். 28:2] உண்டாகியது. சாத்தான் இவைகளை விளைவித்தானா?

பிலிப்பிய சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் நள்ளிரவில் தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தபோது, ''சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக *பூமி மிகவும் அதிர்ந்தது*; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று'' [அப். 16:26 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. சாத்தான் இந்தப் பூமியதிர்ச்சியை உண்டாக்கினானா? நான் அப்படி நினைக்கவில்லை! தேவனுடைய வல்லமையைக் கண்டபிறகு சிறைச்சாலைக்காரன்கூட இரட்சிக்கப்பட்டான். நடபடிகளின் புத்தகத்தில் தேவன் உண்டாக்கிய ஒரே பூமியதிர்ச்சி இது மட்டுமல்ல [பார்க்க, அப். 4:31].

சமீபத்தில் நல்ல நோக்கம் கொண்ட சில கிறிஸ்தவர்களைக் குறித்த ஒரு செய்தியை நான் வாசித்தேன். ஒரு பகுதியில் பூமியதிர்ச்சி உண்டாகலாம் என்று அறிவிக்கப்பட்டபோது அவர்கள் அந்த இடத்துக்குச் சென்று பிசாசுக்கு எதிராக ''ஆவிக்குரிய யுத்தத்தில்'' ஈடுபட்டார்கள். அவர்களுடைய அனுமானத்திலுள்ள பிழையை உங்களால் காண முடிகிறதா? அந்தப் பகுதியிலுள்ள மக்களின்மீது *தேவன் இரக்கம் காட்ட வேண்டும் என்று அவர்கள் ஜெபித்திருந்தால்* அது வேதாகமரீதியானதாக இருந்திருக்கும். அவர்கள் அப்படிச் செய்வதற்காகப் பூமியதிர்ச்சி நடக்கப் போகும் இடம் வரையில் பயணமாகப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது – அவர்கள் இருந்த இடத்திலிருந்தே இதற்காக ஜெபித்திருக்கலாம். ஆனால் ஒரு பூமியதிர்ச்சியை நிறுத்தும்படியாகப் பிசாசை எதிர்த்து யுத்தம்பண்ணுவது என்பது வேதாகமரீதியானது அல்ல.

### சூறாவளிகளைக் குறித்து என்ன?

வேதாகமத்தில் சூறாவளி என்ற சொல் காணப்படவில்லை. ஆனால் புயல்களைக் குறித்த சில எடுத்துக்காட்டுகளை நாம் பார்க்க முடியும். எடுத்துக்காட்டாக:

> கப்பலேறி, கடல்யாத்திரை பண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். *அவர் கட்டளையிடப் பெருங்காற்று எழும்பி*, அதின் அலைகளைக் கொந்தளிக்கப்பண்ணும் [சங். 107:23–25 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு





> உண்டாயிற்று [யோனா 1:4 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].
>
> இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன் [வெளி. 7:1].

தேவனால் பெருங்காற்றைத் துவங்கவும் முடியும், நிறுத்தவும் முடியும் என்பது தெரிகிறது. [87]

முழு வேதாகமத்திலும் சாத்தான் புயலை அனுப்பியதாக ஒரேயொரு இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. யோபு சோதிக்கப் பட்ட வேளையில் ஒருவன் அவனிடம் வந்து ''வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்துபோனார்கள்'' என்று கூறினான் [யோபு 1:19].

யோபின் புத்தகத்தின் முதல் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது, சாத்தானை அவனுக்குத் துன்பங்களைக் கொடுத்தான் என்பதை அறிகிறோம். என்றாலும், தேவனுடைய அனுமதியில்லாமல் சாத்தானால் யோபுக்கோ அவனுடைய பிள்ளைகளுக்கோ தீங்கு விளைவிக்க முடியவில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே மறுபடியுமாகத் தேவன் காற்றின்மீது ராஜரீக அதிகாரம் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

### கலிலேயாக் கடலின் பெருங்காற்று

இயேசுவானவரும் அவருடைய சீஷர்களும் ஒருமுறை கலிலேயாக் கடலின் வழியாகப் படகில் பயணம்சென்றுகொண்டிருந்த போது, அவர்களைத் தாக்கிய பெருங்காற்றைக் குறித்து என்ன? சாத்தான்தான் இந்தக் காற்றை அனுப்பியிருக்க வேண்டும். தேவன் ஏன் தமது சொந்தக் குமாரன் இருக்கும் படகைக் கவிழ்த்துவிடக் கூடிய வகையில் பெருங்காற்றை அனுப்ப வேண்டும்? ''தனக்குத்தானே பிரிந்திருக்கும் ராஜ்யம் விழுந்துபோகும்'' அல்லவா? எனவே தேவன் ஏன் இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் பாதிக்கக்கூடிய ஒரு பெருங்காற்றை அனுப்ப வேண்டும்!

[87] தேவனே காற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை நிரூபிக்கும் பிற வசனங்கள்: ஆதி. 8:11; யாத். 10:13,19; 14:21; 15:10; எண். 11:31; சங். 48:7; 78:76; 135:7; 147:18; 148:8; ஏசாயா 11:15; 27:8; எரே. 10:13; 51:16; எசே. 13:11,13; ஆமோஸ் 4:9,13; யோனா 4:8; ஆகாய் 2:17. இந்த எடுத்துக் காட்டுகள் பலவற்றில் தேவன் பெருங்காற்றை நியாயத்தீர்ப்புக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்.

இது நல்லதொரு விவாதமாகவே இருக்கிறது. என்றாலும் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம். தேவன் அந்தப் புயலை அனுப்பாமல், சாத்தான் அதை அனுப்பியிருந்தால், தேவன் சாத்தான் அதை அனுப்பும்படி *அனுமதித்திருக்க* வேண்டும். எனவே அதே கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கிறது: தேவன் ஏன் இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் தீங்கிழைக்கக் கூடிய ஒரு புயலைச் சாத்தான் அனுப்பும்படி அவனுக்கு அனுமதியளிக்க வேண்டும்?

இதற்குப் பதில் இருக்கிறதா? ஒருவேளை தேவன் சீஷர்களுக்கு விசுவாசத்தைக் குறித்துப் போதித்துக்கொண்டிருக்கலாம். அல்லது அவர் இயேசுவைச் சோதித்துக்கொண்டிருக்கலாம். ஏனென்றால் அவர் ''எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்க'' வேண்டியிருக்கிறது (எபி. 4:15). முழுவதுமாகச் சோதிக்கப்பட வேண்டுமானால், பயப்படும்படி சோதிக்கப்படுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்பட வேண்டும். ஒருவேளை தேவன் இயேசுவை மகிமைப்படுத்த வேண்டியிருக்கலாம். அல்லது அவர் மேலேயுள்ள எல்லாவற்றையும் செய்ய விரும்பியிருக்கலாம்.

இஸ்ரவேல் மக்கள் பார்வோனின் இராணுவத்துக்கும் சிவந்த சமுத்திரத்துக்கும் இடையில் மாட்டிக்கொள்ளுவார்கள் என்று தெரிந்தே தேவன் அவர்களைச் சிவந்த சமுத்திரத்தின் கரை வரையில் வழிநடத்தி வந்தார். ஆனால் தேவன் இஸ்ரவேலரை *விடுவிப்பதாக* அல்லவா சொல்லப்பட்டிருக்கிறது? பிறகு ஏன் அவர் அவர்கள் அழித்துப்போடப்படும்படியான நிலைமைக்குக்கொண்டு வந்திருக்கிறார்? இது ''தனக்குத்தானே பிளவுபட்டிருக்கும் ராஜ்யத்துக்கு'' எடுத்துக்காட்டாக இருக்கவில்லையா?

இல்லை. ஏனென்றால் இஸ்ரவேலர் அழிக்கப்பட வேண்டும் என்று தேவன் ஒருபோதும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. இதைப் போலவே கலிலேயாக் கடலில் புயலை அனுப்பும்போது அல்லது சாத்தான் அனுப்பும்படி அனுமதித்தபோது, இயேசுவும் பன்னிரு சீஷர்களும் மூழ்கி இறந்துபோக வேண்டும் என்ற நோக்கத்தை அவர் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை.

வேதாகமத்தில் சாத்தான் கலிலேயாக் கடலில் புயலை அனுப்பினான் என்றோ அல்லது தேவன் அனுப்பினார் என்றோ சொல்லப்பட்டிருக்கவில்லை. இயேசுவானவர் அதைக் *கடிந்துகொண்டபடியால்* அது சாத்தானால் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது சரியான விவாதம் அல்ல. ஏனென்றால் இயேசு *தேவனைக்* கடிந்துகொள்ளவில்லை. அவர் காற்றைக் கடிந்துகொண்டார். பிதாவாகிய தேவனால் அதே காரியத்தைச் செய்ய முடிந்திருக்கும். அதாவது, அவர் ஒரு வார்த்தையினால் புயலைத் தூண்டிவிட்டு, பிறகு அதைக் கடிந்துகொள்ளுவதின்மூலம் அமைதிப்படுத்தியிருக்க முடியும்.





இயேசுவானவர் புயலைக் கடிந்துகொண்டார் என்பது சாத்தானே அதை அனுப்பினான் என்பதை நிரூபிக்கவில்லை.

மறுபடியுமாக, எதையும் நிரூபிக்காத ஒரே வசனத்தின் அடிப்படையில் நமது இறையியலை நாம் உருவாக்கக்கூடாது. தேவன் ராஜரீகமாகக் காற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை நிரூபிக்க நான் ஏற்கெனவே பல வேத வசனங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அவரே அதை அனுப்பியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாத்தான் ''உலகத்தின் அதிபதியாக'' இருந்தாலும், காற்றைக் கட்டுப்படுத்தவோ அல்லது தான் விரும்பிய எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சூறாவளியை உருவாக்கவோ தனிப்பட்ட கட்டுப்பாட்டைப் பெற்றிருக்கவில்லை என்பதே என்னுடைய முக்கிய கருத்தாகும்.

எனவே சூறாவளி வரும்போது அதைத் தேவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக நினைக்கக் கூடாது. அதாவது அவர் தடுக்க விரும்பியும் தடுக்காத ஒன்றாக நினைக்கக் கூடாது. தேவன் விரும்பினால் அவரால் சூறாவளியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதற்குக் கலிலேயாக் கடலில் இயேசு காற்றை அதட்டியதே நிரூபணமாக இருக்கிறது.

தேவன் ஒரு சூறாவளியை அனுப்பினாலோ (அல்லது அனுமதித்தாலோ) அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அவர் கீழ்ப்படியாத மக்களை எச்சரித்து அவர்களைத் தண்டிக்கிறார் என்பதே அதிகமான அழிவை உண்டாக்கக்கூடிய சூறாவளியை அவர் ஏன் அனுப்புகிறார் அல்லது ஏன் அனுமதிக்கிறார் என்பதற்குரிய பதிலாகும்.

### ''ஆனால்சூறாவளிகள் சில வேளைகளில் கிறிஸ்தவர்களுக்கும் தீங்கிழைக்கின்றன''

ஆனால் இயற்கை அழிவுகளினால் பாதிக்கப்படும் கிறிஸ்தவர்களைக் குறித்து என்ன? ஒரு சூறாவளி தாக்கும்போது அது கிறிஸ்தவர்களல்லாதவர்களின் வீடுகளை மட்டும் அழித்துப் போடுவதில்லை. இயேசுவின் பலி மரணத்தின் காரணமாக கிறிஸ்தவர்கள் தேவனுடைய கோபாக்கினையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படியானால் தமது சொந்தப் பிள்ளைகளையும் பாதிக்கக்கூடிய இயற்கை அழிவுகளுக்குப் பின்னால் இறுதியாகத் தேவனே இருக்கிறார் என்று நம்மால் எப்படிச் சொல்ல முடியும்?

இவை உண்மையில் கடினமான கேள்விகளாகும். என்றாலும், சாத்தானே இயற்கை அழிவுகளை உண்டாக்குகிறான் என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையில் பதிலளிப்போமானால் அது கடினமாகவே இருக்கும். சாத்தானே இயற்கை அழிவுகள் எல்லாவற்றையும் விளைவிக்கிறவனாக இருப்பான் என்றால், பிறகு ஏன் தேவன் தமது சொந்தப்

பிள்ளைகளையும் பாதிக்கக்கூடிய காரியங்களை அவன் விளைவிக்கும்படி *அனுமதிக்க* வேண்டும்? இப்போதும் அதே பிரச்சினையையே எதிர் நோக்குகிறோம்.

கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் ''கோபாக்கினைக்காக நியமிக்கப் படவில்லை'' என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது [1 தெச. 5:9]. அதே வேளையில் இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவர்களின்மீது ''தேவனுடைய கோபம் நிலைநிற்கிறது'' என்று வேதாகமம் சொல்லு கிறது [யோவான் 3:36]. இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர் களின் மத்தியில் வசிக்கும்போது எப்படித் தேவனுடைய கோபம் இரட்சிக்கப்படாதவர்களின்மீது மட்டும் நிலைநிற்கும்? சில வேளைகளில் அது முடியாது என்ற உண்மையை நாம் எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

யாத்திராகம நாட்களில் இஸ்ரவேலர் எல்லோரும் ஒரே இடத்தில் வசித்தார்கள். தேவன் எகிப்தியருக்கு விரோதமாக அனுப்பிய வாதைகளால் இஸ்ரவேலர் பாதிக்கப்படவில்லை [பார்க்க, யாத். 8:22–23; 9:3–7, 24–26; 12:23]. ஆனால் நாமோ ''எகிப்தியர்களுக்கு'' அருகருகே வசிக்கிறோம், வேலை செய்கிறோம். இயற்கை அழிவின்மூலம் தேவன் அவர்களைத் தண்டிக்க வேண்டியிருக்குமானால், நாம் அதற்குத் தப்புவது எப்படி?

இந்தக் கேள்விக்கான பதிலைப் புரிந்துகொள்ளுவதில் *தப்பிப்பது* என்பது முக்கியமான சொல்லாக இருக்கிறது. தேவன் உலகத்தைப் பெருவெள்ளத்தினால் நிரப்பியபோது நோவா தேவனுடைய முழுமையான கோப்பாக்கினைக்குத் தப்பினாலும் அவனும் பாதிக்கப்பட்டான். அவன் ஒரு பேழையைக் கட்டுவதற்காகக் கடினமாக உழைக்க வேண்டியிருந் தது. ஓராண்டு துர்நாற்றம் பிடித்த மிருகங்களோடு சேர்ந்து வாழ வேண்டியிருந்தது. [பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் சாத்தான் அல்ல, தேவனே பெருவெள்ளத்துக்குக் காரணம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. பார்க்க, ஆதி. 6:17; 2 பேதுரு 2:5].

சோதோம் கொமோராவின்மீது தேவனுடைய கோபாக்கினை விழுந்தபோது லோத்து உயிர்தப்பினான். ஆனாலும் அந்த அழிவில் தனக்குரிய எல்லாவற்றையும் இழந்துபோனான். தீய மக்களின்மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நீதிமானையும் பாதித்தது.

எருசலேமிலிருக்கும் விசுவாசிகள் பட்டணமானது சேனைகளால் சூழப்பட்டிருப்பதைக் காணும்போது தப்பியோட வேண்டும் என்று இயேசு வானவர் எச்சரித்திருக்கிறார். ஏனென்றால் அவை ''நீதியைச் சரிக்கட்டும் நாட்களாக'' இருக்கின்றன [லூக்கா 21:22–23]. கி.பி. 70இல் எருசலேம் ரோமானியர்களால் அழிக்கப்படுவதற்கு அனுமதித்த தேவ கோபாக்கினை யின் நோக்கத்தை இது தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது. கிறிஸ்துவின் எச்சரிப்புக்குச் செவிகொடுத்த கிறிஸ்தவர்கள் இதிலிருந்து தப்பினார்கள் என்பதற்காகத் தேவனைத் துதிப்போம். என்றாலும் எருசலேமில் அவர்கள்





தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டே ஓட வேண்டியிருந்தது.

மேலேயுள்ள மூன்று எடுத்துக்காட்டுகள் ஒவ்வொன்றிலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தீயவர்களின்மீது விழும்போது தேவனுடைய மக்களும்கூட ஓரளவுக்குப் பாடுபட வேண்டியிருக்கும் என்பதைக் காண்கிறோம். எனவே சில வேளைகளில் கிறிஸ்தவர்களையும் பாதிக்கும் இயற்கை அழிவுக்குத் தேவன் பொறுப்பானவர் அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியாது.

### அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்?

தேவனால் சபிக்கப்பட்ட ஒரு உலகத்தில் நாம் வாழ்கிறோம். எல்லா வேளைகளிலும் இந்த உலகமானது தேவனுடைய கோபாக்கினையை அனுபவித்துவருகிறது. ''சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக் கிறது'' [*''வெளிப்படுத்தப்படப் போகிறது''* அல்ல] என்று பவுல் எழுதியிருக்கிறார் [ரோமர் 1:18]. தேவனால் சபிக்கப்பட்ட உலகத்தில், தீயவர்களின் மத்தியில் வாழும் நாம் எல்லோருமே உலகத்தின்மீதான தேவனுடைய கோபாக்கினைக்கு – அது நம்மீது செலுத்தப்படா விட்டாலும்கூட அதிலிருந்து முழுவதுமாகத் தப்ப முடியாது.

இதை அறிந்திருக்கும் நாம் என்ன செய்ய வேண்டும்? முதலில் தேவன்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எரேமியா இப்படி எழுதியிருக் கிறார்:

> கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப் பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான் [எரேமியா 17: 7–8].

கர்த்தரைத் தனது நம்பிக்கையாகக் கொண்டிருக்கும் ஒருவன் பஞ்சத்தை எதிர்நோக்க மாட்டான் என்று எரேமியா சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். அப்படி உஷ்ணமும், மழைத் தாழ்ச்சியும் தாக்கும்போது அவன் தண்ணீரண்டையில் வேர்விடுகிற மரத்தைப் போலிருப்பான். தன்னைச் சுற்றியுள்ள உலகம் துன்பத்தில் தவித்தாலும் அவன் தனக்கு வேறொரு ஆதாரத்தைப் பெற்றிருக்கிறான். இஸ்ரவேல் பஞ்சத்தில் வாடிக்கொண்டிருந்தபோது எலியா தீர்க்கதரிசி காகங்களி னால் போஷிக்கப்பட்டது ஒரு எடுத்துக்காட்டாக நினைவில் வருகிறது

[பார்க்க, 1 இரா. 17:1–6]. நீதிமான்களைக் குறித்து எழுதும்போது தாவீது ''அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்ச காலத்திலே திருப்தியடைவார்கள்'' என்று சொல்லியிருக்கிறார்'' [சங். 37:19].

பஞ்சங்கள் பிசாசினால் கொண்டுவரப்படுவதில்லையா? இல்லை. வேதவசனம் அப்படிச் சொல்லவில்லை. தேவனே எப்போதும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார். தண்டிக்கப்பட வேண்டிய மக்களின்மீது அவரது கோபாக்கினையின் விளைவாகவே பஞ்சம் வருகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக:

> இதோ, *இதனிமித்தம் உங்களை விசாரிப்பேன்;* இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள்; *அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்* [எரேமியா 11:22, அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> இதோ, நான் பட்டயத்தையும், *பஞ்சத்தையும்*, கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; புசிக்கத்தகாத கெட்டுப் போன அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்கு வேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் [எரேமியா 29:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> மனுபுத்திரனே, ஒரு தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிக் கொண்டேயிருந்து, பாவஞ் செய்தால், நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, *அதில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி*, மனுஷரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் [எசேக்கியேல் 14:13, அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது; நீங்கள் அறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்தும், நான் அதை ஊதிப்போடுகிறேன்; எதினிமித்தமென்றால், என் வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதனிமித்தமே என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆதலால் உங்கள்மேல் இருக்கிற வானம் பனியைப் பெய்யா மலும், பூமி பலனைக் கொடாமலும் போயிற்று. நான் நிலத்தின்மேலும், மலைகளின்மேலும், தானியத்தின் மேலும், புது திராட்சரசத்தின்மேலும், எண்ணெயின் மேலும், பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும், மனுஷரின் மேலும், மிருகங்களின்மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் *வறட்சியை வருவித்தேன்* என்றார் [ஆகாய் 1: 9–11, அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].





மேலேயுள்ள நான்காவது எடுத்துக்காட்டில், இஸ்ரவேலரின் பாவத்தின் காரணமாக பஞ்சம் வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆனாலும் தேவனே தாம் அதை வருவித்ததாகச் சொல்லுகிறார். [88]

தேவன் தீய மக்களின்மீது பஞ்சத்தை அனுப்பும்போது, நாம் அந்தத் தீய மக்களின் மத்தியில் வாழ்வோமானால், அவர் நமது தேவைகளைச் சந்திப்பார் என்று நாம் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். பஞ்சம் நம்மைக் கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரித்துவிட முடியாது என்று பவுல் உறுதிப்படுத்தியிருக்கிறார்: ''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, *பசியோ*, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?'' [ரோமர் 8:36 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பஞ்சத்தை எதிர்நோக்க மாட்டார்கள் என்று பவுல் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். வேதவசனங்களின் மாணாக்கராக இருந்த அவர் தேவன் தீயவர்களை நியாயந்தீர்க்கும்படி பஞ்சத்தை அனுப்புகிறார் என்பதை அறிந்திருந்தாலும், கிறிஸ்தவர்களும் அவைகளுக்கு ஆளாகலாம் என்றே சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## கீழ்ப்படிதலும் ஞானமும்

இரண்டாவதாக, நாம் கீழ்ப்படிதலோடு இருந்து தேவன் உலகத்துக்கு அனுப்பும் எந்தக் கோபாக்கினையையும் தவிர்க்கும்படி தேவனுக்கடுத்த ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். நோவா பேழையைக் கட்ட வேண்டியிருந்தது, லோத்து மலைகளை நோக்கி ஓட வேண்டியிருந்தது, எருசலேம் கிறிஸ்தவர்கள் தங்கள் பட்டணத்தைவிட்டு ஓட வேண்டி யிருந்தது. தேவன் தீயவர்களின்மீது தமது நியாயத்தீர்ப்பைச் செயல் படுத்தும்போது இவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது.

[88] தேவன் பஞ்சத்தை விளைவிக்கிறார் என்பதற்கான கூடுதலான மேற்கோள் களுக்குப் பார்க்க, உபா. 32:23–24; 2 சாமு. 21:1; 24:1213; 2 இரா. 8:1; சங். 105:16; ஏசாயா 14:30; எரே. 14:12,15–16; 16:34; 24:10; 27:8; 34:17; 42:17; 44:12–13; எசே. 5:12,16–17; 6:12; 12:16; 14:21; 36:29; வெளி. 6:8; 18:8. இயேசுவானவர்தாமே தேவன் ''நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்'' என்று சொல்லியிருக்கிறார் [மத். 5:45]. தேவன் மழையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

நான் சூறாவளி அடிக்கும் பகுதியில் வசிப்பேன் என்றால் சூறாவளியினால் வீழ்த்தப்பட முடியாத வலுவான கட்டிடத்தைக் கட்டுவேன் அல்லது மிக எளிதாக மறுபடியும் கட்டக்கூடிய வகையில் மலிவான வீட்டைக் கட்டுவேன். மேலும் நான் ஜெபிப்பேன். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜெபித்து, ஆவியானவரைக் குறித்த உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்போது உலகத்தின்மீதான தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்பும்படி சத்திய ஆவியானவர் ''வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்'' என்று இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் [யோவான் 16:13].

யூதேயாவில் வாழும் கிறிஸ்தவர்களைப் பாதிக்கக்கூடிய பஞ்சத்தைக் குறித்து அகபு தீர்க்கதரிசி எச்சரிப்பதை நாம் அப்போஸ்தலர் 11ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். அவர்களுடைய நிவாரணத்துக்காகப் பவுலும் பர்னபாவும் நிதி சேகரிக்கிறார்கள் [பார்க்க, அப். 11:28–30].

இப்படிப்பட்ட காரியங்கள் இப்போதும் நடக்கக் கூடுமா? நிச்சயமாக! ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் மாறவில்லை, தேவனுடைய அன்பும் மங்கிப்போகவில்லை. என்றாலும் கிறிஸ்துவின் சரீரத்தைச் சேர்ந்த சிலர் பரிசுத்த ஆவியானவரின் இப்படிப்பட்ட வரங்கள் மற்றும் வெளிப்பாடுகளுக்குத் திறந்துகொடுக்காதிருப்பது துரதிருஷ்டமாகும். அவர்கள் ஆவியை அவித்துப் போடுகிறபடியால் [1 தெச. 5:19] தேவனுடைய சிறப்பான காரியங்கள் சிலவற்றை இழந்துபோகிறார்கள்.

பூரண சுவிசேஷ தொழிலதிபர்கள் என்ற ஊழிய அமைப்பை நிறுவிய டெமோஸ் ஷக்கரியான் தனது வாழ்க்கை வரலாற்று நூலில், 1800 ஐ அடுத்த ஆண்டுகளில் ஆர்மீனியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களோடு கற்றறியாத ஒரு சிறுவன் மூலம் தேவன் தீர்க்கதரிசனம் அறிவித்தார் என்று குறிப்பிட்டிருக்கிறார். வரவிருக்கும் பேரழிவைக் குறித்துத் தேவன் எச்சரித்தார். இப்படிப்பட்ட இயல்புக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளை விசுவாசிக்கும் ஆயிரக்கணக்கான பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். இவர்களில் ஷக்கரியானின் தாத்தா பாட்டிகளும் இருந்தார்கள். விரைவிலேயே துருக்கி ஆர்மீனியாவைப் பிடித்தது. பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டார்கள். தேவனுடைய எச்சரிப்புக்குச் செவிசாய்க்காத கிறிஸ்தவர்களும் அவர்களோடு சேர்ந்து கொல்லப்பட்டார்கள்.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த உணர்வுள்ளவர்களாகவும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும் நாம் ஞானத்தோடு நடந்துகொள்ள வேண்டும். அல்லது நாம் அனுபவிக்க வேண்டாம் என்று நினைக்கும் தேவ கோபாக்கினையில் நாமும் பங்குபெற வேண்டியிருக்கும். எலிசா ஒருமுறை ஒரு பெண்ணுக்கு இப்படி அறிவுரை கொடுத்தார்: ''நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப்போய் எங்கேயாகிலும் சஞ்சரி;





கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்; அது ஏழு வருஷம் தேசத்தில் இருக்கும்'' [2 இரா. 8:1]. அந்தப் பெண் எலிசாவுக்குச் செவிகொடுக்காமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

வெளிப்படுத்தலின் புத்தகத்தில், தேவன் ''பாபிலோனின்மீது'' தமது கோபாக்கினையை அனுப்பும்போது, தேவனுடைய மக்கள் அதில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று அவர்களுக்கு எச்சரிப்பு விடுக்கப்படுவதை நாம் காண்கிறோம்:

> பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், *அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும்* இருக்கும்படி அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்... ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர் [வெளி. 18:4–5, 8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

சுருக்கமாகச் சொல்லுவோமானால், தேவன் பருவ நிலையின்மீதும், இயற்கை அழிவுகளின்மீதும் ராஜரீகமான அதிகாரம் பெற்றிருக்கிறார். தாம் இயற்கையின்மீது ஆண்டவராக இருப்பதைத் தேவன் வேதாகமத்தில் மறுபடியும் மறுபடியுமாக நிரூபித்திருக்கிறார். அவர் நோவாவின் நாட்களில் நாற்பது நாட்கள் மழைபெய்யும்படி செய்தார், இஸ்ரவேலரின் எதிரிகளுக்கு விரோதமாக ஆலங்கட்டி மழையையும் பிற இயற்கைப் பேரழிவுகளையும் அனுப்பினார். யோனாவின் கப்பலுக்கு எதிராகப் புயலை எழும்பப்பண்ணினார், கலிலேயாக் கடலில் காற்றைக் கடிந்துகொண்டார். இயேசுவானவர் சொல்லியதுபோல அவர் ''வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராக'' இருக்கிறார் [மத். 11:25]. தேவன் இயற்கையின்மீது ஆளுகை செய்கிறார் என்பதற்குக் கூடுதலான நிரூபணத்துக்காகப் பார்க்க: யோசுவா 10:11; யோபு 38:22–38; எரே. 5:24; 10:13; 31:35; சங். 78:45–49; 105:16; 107:33–37; 135:6–7; 147:7–8,15–18; மத். 5:45; அப். 14:17.

## சில கேள்விகளுக்குப் பதில்

தேவன் பஞ்சங்கள், வெள்ளங்கள், பூமியதிர்ச்சிகளின்மூலமாக மக்களை நியாயந்தீர்க்கிறார் என்றால், தேவனுடைய பிரதிநிதிகளாக

இருக்கும் நாம் தேவனால் தண்டிக்கப்பட்டு துன்பத்தில் இருக்கிறவர்களுக்கு நிவாரணம் வழங்குவதும், உதவிசெய்வதும் தவறாக ஆகுமா?

இல்லை, நிச்சயமாக இல்லை. தேவன் தாம் நியாயந்தீர்க்கும் மக்கள் உட்பட எல்லோரிடமும் அன்புகாட்டுகிறார் என்பதை நாம் உணர வேண்டும். இது நமக்கு விநோதமாகத் தோன்றினாலும், தேவன் இயற்கைப் பேரழிவின்மூலமாகத் தமது நியாயத்தீர்ப்பை அனுப்புவதும் அவருடைய அன்பையே சுட்டிக்காட்டுகிறது. இது எப்படி முடியும்? இயற்கைப் பேரழிவினால் வரும் கஷ்டங்களின் மூலமாகத் தேவன் தாம் பரிசுத்தராகவும், நியாயந்தீர்க்கிறவராகவும் இருப்பதைக் குறித்துத் தாம் நேசிக்கும் மக்களுக்கு எச்சரிப்பு விடுக்கிறார். பாவத்துக்குப் பின்விளைவு உண்டு என்பதை அவர்களுக்கு உணர்த்துகிறார். மக்கள் அக்கினிக் கடலுக்குத் தப்புவதற்குத் தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை உணருவதற்காக அவர் வேதனைகளை அனுமதிக்கிறார். இதுவே அன்பாகும்!

மக்கள் உயிரோடிருக்கும் வரையில் தேவன் அவர்களுக்குத் தகுதியல்லாத இரக்கத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார், அவர்கள் மனந்திரும்புவதற்கு வாய்ப்பிருக்கிறது. தேவனுடைய தாற்காலிக மான கோபாக்கினையை அனுபவிக்கும் மக்களுக்கு நாம் மனதுருக்கம் காட்டி, உதவிசெய்வதின்மூலம் தேவனுடைய அன்பை அவர்களுக்குச் செயல்பூர்வமாகக் காட்ட முடியும். அவர்கள் நித்திய கோபாக்கினையிலிருந்து தப்பும்படி வழிகாட்ட முடியும். இயேசுவானவர் எந்த உலகத்துக்காக மரித்தாரோ அந்த உலகத்தை எட்டிச்சேர இயற்கை அழிவுகள் உதவியாக இருக்கின்றன.

இந்த வாழ்க்கையில் மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதே மிக முக்கியமான காரியமாக இருக்கிறது அல்லவா? நித்திய பார்வையில் நாம் நோக்கும்போது, அக்கினிக்கடலில் தள்ளப்படுகிறவர்களின் வேதனைகளோடு ஒப்பிடும்போது இயற்கை அழிவுகளினால் பாதிக்கப்படுகிறவர்களின் வேதனை அவ்வளவு பெரிதாக இல்லை என்பதைக் காண்போம்.

மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வேளையில் சுவிசேஷத்தை அதிகமாக ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மையாகும். அண்டைநாடுகளால் ஒடுக்கப்படும்போது இஸ்ரவேலர் மனந்திரும்புவதிலிருந்து, இயேசுவானவரின் கதையில் வரும் கெட்ட குமாரன் வரையில் வேதாகமத்தில் நாம் பல எடுத்துக்காட்டுகளைக் காணலாம். இயற்கை அழிவுகளைக் கிறிஸ்தவர்கள் அறுவடை ஆயத்தமாக இருக்கும் வேளைகளாகக் காண வேண்டும்.

### சத்தியத்தைச் சொல்லுவோமாக

ஒரு சூறாவளியோ அல்லது பூமியதிர்ச்சியோ தாக்கிய பிறகு தங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்த முயலுகிறவர்களுக்கு நாம் கொடுக்க





வேண்டிய செய்தி என்ன? தங்கள் நிலைமைக்கு இறையியல்ரீதியான பதில் என்ன என்று அவர்கள் கேட்கும்போது நாம் என்ன பதில் கொடுக்க வேண்டும்? வேதாகமம் போதிப்பதை நாம் நேர்மையுடன் எடுத்துச் சொல்ல வேண்டும். தேவன் பரிசுத்தர் என்றும், அவர்களுடைய பாவங்கள் பின்விளைவுகளைக் கொண்டுவரும் என்றும் மக்களுக்குச் சொல்ல வேண்டும். சூறாவளியின் பயங்கரமான உறுமல் சர்வ வல்ல தேவனின் வல்லமைக்கு ஒரு சிறிய மாதிரி மட்டுமே என்றும், அவர்கள் நரகத்தில் தள்ளப்படும்போது அனுபவிக்கப்போகும் பயத்தோடு ஒப்பிடும்போது, அவர்களுடைய வீடு அதிரும்போது ஏற்பட்ட பயம் ஒன்றுமில்லை என்பதையும் நாம் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். நாம் எல்லோருமே நரகத்தில் தள்ளப்படுவதற்கே தகுதியுள்ளவர்களாக இருந்த போதிலும், நாம் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்கான நேரத்தைத் தேவன் இரக்கத்தோடு கொடுத்திருக்கிறார். அவர் மூலமாகவே நாம் தேவ கோபாக்கினைக்குத் தப்ப முடியும்.

‘‘ஆனால் தேவனைக்குறித்து நாம் மக்களைப் பயமுறுத்தக் கூடாது அல்லவா?’’ என்று சிலர் கேட்கலாம். வேதவசனத்தில் நாம் இதற்கான பதிலைக் காண்கிறோம்: ‘‘கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்’’ [நீதி. 1:7]. மக்கள் தேவனுக்குப் பயப்படும் வரையில் அவர்கள் எதையும் அறிந்திருக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

### மக்கள் தேவன்மீது கோபப்பட்டால் அதைக் குறித்து என்ன?

ஆனால் மக்கள் தங்கள் வேதனைகளின் காரணமாகத் தேவன்மீது கோபப்படுவார்கள் அல்லவா? ஆனால் நாம் சாந்தத்தோடு அவர்களோடு இடைபட வேண்டும். நாம் எல்லோருமே நீண்ட காலத்துக்கு முன்பே நரகத்தில் தள்ளப்படுவதற்குத் தகுதியானவர்களாகவே இருப்பதால், தேவன் நம்மை நடத்தும் விதத்துக்காக நம்மால் அவரைக் குற்றம் சொல்ல முடியாது. தங்கள் அழிவுக்காகத் தேவனைச் சபிப்பதற்கு மாறாக, தங்களை எச்சரிக்கும் அளவுக்கு அவர் அன்புகாட்டியபடியால் அவரைத் துதிக்க வேண்டும். தேவன் எல்லோரையும் புறக்கணித்து, அவர்கள் தங்கள் சுயநலமாக வழிகளில் நரகத்தை நோக்கிச் செல்லும்படி விட்டுவிட எல்லா உரிமையையும் பெற்றிருக்கிறார். ஆனால் தேவன் மக்களிடம் அன்புகூருகிறபடியால், ஒவ்வொரு நாளும் அவர்களை அழைக்கிறார். ஆப்பிள் மரம் மலர்விடுவதின் மூலமாகவும், பறவைகளின் கானங்களின் மூலமாகவும், மலைகளின் கெம்பீரத்தின் மூலமாகவும், எண்ணற்ற நட்சத்திரங்களின் பிரகாசத்தின் மூலமாகவும் அவர் அவர்களை மென்மையாக அழைத்துக்கொண்டிருக்கிறார். அவர்களுடைய மனச்சாட்சியின் மூலமாகவும், தம்முடைய சரீரமாகிய சபையின் மூலமாகவும், தமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவும்

அவர் அவர்களை அழைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் அவருடைய அழைப்பைப் புறக்கணிக்கிறார்கள்.

மக்கள் துன்பப்படுவது தேவனுடைய சித்தமல்ல. ஆனால் அவர்கள் தொடர்ந்து அவரைப் புறக்கணிக்கும்போது, கடுமையான வழிகளின்மூலம் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க முயலுகிறார். சூறாவளிகள், பூமியதிர்ச்சிகள், வெள்ளங்கள், பஞ்சங்கள் இவை இந்தக் கடுமையான வழிகளாகும். இத்தகைய அழிவுகள் மக்களின் பெருமையைத் தாழ்மைப்படுத்தி அவர்களை உணரச் செய்யும் என்று தேவன் நம்புகிறார்.

## தேவன் நமது நியாயத்தீர்ப்பில் நியாயமில்லாதவராக இருக்கிறாரா?

வேதாகமக் கண்ணோட்டத்தில் நாம் தேவனையும் நமது உலகத்தையும் நோக்கிப் பார்க்கும்போது, அப்போதுதான் நாம் சரியான வழியில் சிந்திக்கிறோம். எல்லோரும் தேவ கோபாக்கினைக்குப் பாத்திரராக இருக்கிறார்கள், ஆனால் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கிறார் என்பதே வேதாகமப் பார்வையாகும். துன்பப்படும் மக்கள் தாங்கள் தேவனால் இன்னும் சிறப்பாக நடத்தப்பட வேண்டும் என்று சொல்லும்போது, அது அவருக்கு வேதனையளிக்கிறது. எல்லோருமே தங்கள் தகுதிக்கு அதிகமான இரக்கத்தையே பெறுகிறார்கள்.

இந்தக் கருப்பொருளுக்கு ஏற்ற வகையில் இயேசுவானவர் அப்போது நடந்த இரண்டு அழிவுகளைக் குறித்த தமது விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். லூக்காவின் சுவிசேஷத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். சிலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால்





> எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார் [லூக்கா 13:1–5].

பிலாத்துவினால் கொல்லப்பட்ட கலிலேயர் ''பிலாத்துவிடமிருந்து எங்களைக் காப்பாற்றாததின்மூலம் தேவன் நியாயமில்லாத வகையில் எங்களிடம் நடந்துகொண்டார்'' என்று சொல்ல முடியாது. அவர்கள் மரிப்பதற்குத் தகுதியான பாவிகளாகவே இருந்தார்கள். கொல்லப் படாமல் தப்பிப் பிழைத்தவர்கள் தாங்கள் கொல்லப்பட்டவர்களைவிடக் குறைவான பாவமே செய்தவர்கள் என்று நினைத்துக்கொள்ளக் கூடாது என்பதே இயேசுவானவரின் விளக்கமாகும். அவர்கள் தேவனிடமிருந்து அதிகமான தயவைச் *சம்பாதித்திருக்கவில்லை* – அவர்களுக்கு அதிகமான இரக்கம் *காட்டப்பட்டிருக்கிறது.*

கிறிஸ்துவின் செய்தி தெளிவாக இருக்கிறது: ''நீங்கள் எல்லோரும் பாவிகள். பாவத்துக்குப் பின் விளைவுகள் உண்டு. இப்போதைக்கு நீங்கள் தேவனுடைய இரக்கத்தினாலேயே வாழ்கிறீர்கள். எனவே அதிகத் தாமதமாகிவிடுவதற்கு முன்னால் மனந்திரும்புங்கள்.''

தேவனுடைய இரக்கத்தைக் குறித்த ஒரு உவமைக்கதையின் மூலம் இந்தச் சோகமான நிகழ்வுகளைக் குறித்த தமது விளக்கத்தை இயேசு முடித்திருக்கிறார்:

> அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்; ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப் போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார் [லூக்கா 13:6–9].

இங்கே தேவனுடைய நீதியும் இரக்கமும் எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. தேவனுடைய நீதி ''பயனில்லாத இந்த மரத்தை வெட்டிப்போடு'' என்று சொல்லுகிறது. தேவனுடைய இரக்கமோ ''அது கனிகொடுக்க இன்னும் கொஞ்சம் காலம் கொடுக்கலாம்'' என்று கெஞ்சுகிறது. கிறிஸ்துவில்லாத ஒவ்வொருவரும் இந்த மரத்தைப் போல இருக்கிறார்கள்.

### சூறாவளிகளையும் வெள்ளங்களையும் நம்மால் கடிந்துகொள்ள முடியுமா?

இயற்கை அழிவுகளைக் குறித்த ஒரு இறுதியான கேள்வி: நாம் போதுமான விசுவாசத்தைப் பெற்றிருப்போமானால் இயற்கை அழிவுகளைக் கடிந்துகொண்டு, அவை நடக்காமல் தடுக்க முடியும் என்பது உண்மையாகுமா?

விசுவாசம் கொண்டிருப்பது தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை நம்புவதாகும். எனவே விசுவாசமானது தேவனுடைய சொந்த வார்த்தையை அஸ்திபாரமாகக் கொண்டிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அது விசுவாசமே இல்லை, அது நம்பிக்கையாகவோ அல்லது அனுமானமாகவோ இருக்கிறது. நாம் சூறாவளிகளைக் கடிந்து கொண்டு அவைகளை அமைதிப்படுத்த முடியும் என்று தேவன் வேதாகமத்தில் எங்கேயும் வாக்குத்தத்தம் கொடுக்கவில்லை. எனவே தேவன் ராஜரீகமாக அவருக்கு விசுவாசத்தை அருளாவிட்டால் அப்படிச் செய்வதற்கான விசுவாசத்தை ஒருவராலும் பெற முடியாது.

இதைக்குறித்து இன்னும் விளக்க விரும்புகிறேன். தேவன் ஒரு குறிப்பிட்ட பூகோளப் பகுதியில் ஒரு சூறாவளி தாக்கக்கூடாது என்று விரும்புகிறார் என்ற நிச்சயத்தைப் பெற்றால் மட்டுமே ஒருவர் அந்தச் சூறாவளியைக் கடிந்துகொள்ளக்கூடிய விசுவாசத்தைப் பெற முடியும். வேதவசனங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்டபடி, தேவனே காற்றைக கட்டுப்படுத்துகிறவராகவும், அதனால் சூறாவளிகளுக்குப் பொறுப்பான வராகவும் இருக்கிறார். எனவே, தேவன்தாமே ஒரு சூறாவளிக்கான கட்டளையைக் கொடுத்திருக்கும்போது, எவரும் தான் அந்தச் சூறாவளியை நிறுத்த முடியும் என்ற உறுதியான விசுவாசத்தைப் பெறுவது கூடாத காரியமாகும். தேவன் சூறாவளியைக் குறித்த தமது மனதை மாற்றிக்கொள்ளுவது மட்டுமே இதற்கு ஒரே விதிவிலக்காகும். அவர் ஒருவருடைய ஜெபத்துக்குப் பதிலாக இரக்கம் காட்டுவதற்காக இதைச் செய்யலாம் அல்லது தாம் நியாயந்தீர்க்கப் போகிற மக்களின் மனந்திரும்புதலின் காரணமாக இதைச் செய்யலாம் [யோனாவின் நாட்களில் நினிவே பட்டணத்துக்கு நடந்தது இதற்குச் சரியான எடுத்துக்காட்டாக இருக்கிறது]. என்றாலும் தேவன் தமது மனதை மாற்றிக்கொண்டாலும், அவர் தமது மனதை மாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதையும், தான் அதைக் கடிந்துகொண்டு அமைதிப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதையும் ஒருவர் அறிந்திருக்காவிட்டால், சூறாவளியைக் கடிந்து கொள்ளக்கூடிய விசுவாசத்தை அவரால் பெற முடியாது.

இயேசுவானவர் மட்டுமே புயலைக் கடிந்துகொண்டு அதை அடக்கியிருக்கிறார். தேவன் நமக்கு ''விசுவாச வரத்தை'' [அல்லது ''விசேஷித்த விசுவாசத்தைக்'' கொடுத்தால் மட்டுமே நம்மால் இதைச்





செய்ய முடியும். இது 1 கொரிந்தியர் 12:7–11 வசனங்களில் பட்டிய லிடப்பட்டுள்ள ஒன்பது ஆவிக்குரிய வரங்களில் ஒன்றாகும். ஆவியானவரின் எல்லா வரங்களையும்போலவே நாம் விரும்பினால் இந்த வரத்தைச் செயல்படுத்த முடியாது, பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படியே இதைச் செயல்படுத்த முடியும் [பார்க்க, 1 கொரி. 12:11]. எனவே, வரப்போகும் சூறாவளியைக் கடிந்துகொள்ளக் கூடிய விசேஷித்த விசுவாசத்தைத் தேவன் உங்களுக்குக் கொடுத்தாலொழிய நீங்கள் விசுவாசத்தில் செயல்படுவதாகச் சொல்லிக்கொண்டு அதன் பாதையில் நிற்கக் கூடாது. அதன் வழியைவிட்டு நீங்கள் விலகிச் செல்ல வேண்டும்! தேவனுடைய பாதுகாப்புக்காகவும், அவர் தாம் நியாயந்தீர்க்கும் மக்களின்மீது இரக்கம் காட்ட வேண்டுமென்றும், அவர்களுக்கு மனந்திரும்ப வாய்ப்புக் கிடைக்கும்படி அவர்கள் பிழைத்திருக்கும்படி செய்ய வேண்டும் என்றும் ஜெபிக்க வேண்டும்.

பவுல் ரோமாபுரிக்குக் கப்பலில் சென்றபோது, இரண்டு வார காலம் கப்பல் புயல்காற்றினால் அலைக்கழிக்கப்பட்டபோதிலும், அவர் அதைக் கடிந்துகொள்ளவில்லை என்பதைக் கவனியுங்கள் [பார்க்க, அப். 27:14–44]. அவரால் முடியாது என்பதே அவர் அதைச் செய்யாததற்குக் காரணமாகும். தேவன் அந்தக் கப்பலில் இருந்த எல்லோர்மீதும் இரக்கம் காட்டினார் என்பதையும், 276 பேரும் கப்பற்சேதத்துக்குத் தப்பிப் பிழைத்தார்கள் என்பதையும் கவனியுங்கள் [பார்க்க, அப். 27:24,34,44]. அவர்கள்மீது இரக்கம்காட்டும்படி பவுல் ஜெபித்ததின் காரணமாகவே தேவன் அவர்கள்மீது இரக்கம் காட்டினார் என்று நான் நினைக்கிறேன்.

